Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 03 சனிக்கிழமை (16.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 028

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

2021ஆம் ஆண்டுக்கான
## நல்லூர் பட்ஜெட் நிறைவேற்றம்
6ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபிக்கான அத்திபாரப் பணிகள் முன்னெடுப்பு


06

திருகோணமலையிலும்
## பிரதேச சபையை இழந்த கூட்டமைப்பு

(திருகோணமலை)
திருகோணமலை பட்டின மும் சூழலும் (உப்புவெளி) பிர தேச சபையின் புதிய தவிசாள ராக நேற்று ஆர்.ஏ. எஸ்.ரி.ரத்நாயக்கா 19

திருமண மண்டபங்கள், பொதுச் சந்தைகளை
# வடக்கில் திறப்பதற்கு திங்கள் முதல் அனுமதி

### வடக்கு சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
வடக்கில் வவுனியாவைத் தவிர ஏனைய 4 மாவட்டங்களில் உள்ள திருமண மண்டபங்கள் மற்றும் பொதுச்சந்தைகளை நாளை மறுதினம் திங்கள் முதல் திறக்க அனுமதி அளிக்கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மாதம் வடக்கு மாகா ணத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரம்பல் காரணமாக பொதுச் சந்தைகள் மற்றும் திரு மண மண்டபங்கள் அனைத்தும் சுகாதார பிரிவினரால் மூடப்பட் டிருந்த நிலையில் நேற்றுக் காலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக் களத்தில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு வழி 19

மன்னாரில்
## நால்வருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று வெள்ளிக் கிழமை 398 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரி சோதனைகள் மேற் கொள்ளப்பட்டுள்ள 19

## நாட்டில் மேலும் 320 பேருக்கு தொற்று கண்டறிவு

(கொழும்பு)
நாட்டில் மேலும் 320 பேரு க்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ள தாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.
இந்நிலையில், 19

## வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டு ‘சுயாட்சி’ என பெயரிட வேண்டும்
### புதிய அரசியலமைப்பில் ஆலோசனை

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணங் கள் நிரந்தரமாக ஒன்றிணைக் கப்பட்டு தமிழ் மக்களுக்கான சுயாட்சி அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆலோ சனை வழங்கியுள்ளது.
அத்துடன், இவ் 19

படகுகளை அரசுடமையாக்கியதைக் கண்டித்து
## இலங்கைக்கு எதிராக தமிழகத்தில் போராட்டம்

(சென்னை)
தமிழக மீனவர்களின் விசைப் படகுகளை இலங்கை அரசாங் கம் அரசுடமையாக்கியதற்கு எதி ர்ப்புத் தெரிவித்து கச்ச தீவு நோக்கிச் சென்று 19

## கொரோனாவால் மேலும் நால்வர் பலி
### உயிரிழப்பு 255 ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரி 19

## கொரோனா சமூகமயமாகியுள்ளது முழு இலங்கையையும் முடக்குங்கள்
### பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொற்று தற்போது இலங்கையில் சமூக மயமாகியுள்ளதாக பொது சுகா தார பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.
இதனால் நாட்டை முழுமை யாக தனிமைப்படுத்தவில்லை என்றால் கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்த முடி யாமல் போய்விடும் என பொது சுகாதார 19

மேல் மாகாணத்திலிருந்து வருவோரை
## தனிமைப்படுத்தல் வடக்கில் நிறுத்தம்
### உத்தரவிடப்பட்டுள்ளதாக கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 19

இந்தோனேசியாவில்
## சக்தி வாய்ந்த நிலநடுக்கம்
35 பேர் உயிரிழப்பு
600 பேர் படுகாயம்
10ஆம் பக்கம் பார்க்க

## தனிமைப்படுத்தப்படுபவர்கள் பயப்படத் தேவையில்லை
### யாழ்.போதனா பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
கொரோனா தொற்றுக் காரண மாகத் தனிமைப்படுத்தப்படுபவர் கள் தேவையற்ற பயம், பதற் றத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என யாழ்ப்பாண போதனா வைத்திய சாலை பணிப்பாளர் 19

# மன்னாரில் 7, 727 வாக்காளர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளனர்

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ரிஷாட் எம்.பி கடிதம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளால் மன்னார் மாவட்டத்தில் 7,727 வாக்காளர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வாக்களிப்பதற்கு தடுக்கப்பட்ட ஏழாயிரத்து 727 வாக்காளர்களையும், அவர்களது சொந்த மாவட்ட வாக்காளர் இடாப்பில் மீளப் பதிவு செய்து, அவர்களின் வாக்குரிமையை வழங்க வேண்டும் என அவர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், "வடக்கு மாகாணத்தின் மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து, புத்தளம் மாவட்டத்தில் வாழ்ந்து வந்தவர்கள், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் கொத்தணி வாக்களிப்பு முறையூடாக, தமது மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட அதிகமானவர்களின் வாக்காளர் பதிவை, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளரும் அதிகாரிகளும் சேர்ந்து திட்டமிட்டு வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கியுள்ளனர்.

இந்த வாக்காளர்கள் அனைவரும் மீள்குடியேற்றத்துக்காக சொந்த மண்ணுக்குச் சென்று குடியேறியபோதும் போதிய வசதிகள் இன்றி மீள்குடியேறிய இடங்களிலிருந்து தற்காலிகமாக மீண்டும் புத்தளத்துக்கு வந்துள்ளனர்.

இவர்கள், மீள்குடியேறிய பிரதேசங்களில் உரிய வசதிகள் கிடைத்தவுடன் மீண்டும் அங்கு செல்வதற்கு விருப்பத்துடன் இருக்கின்றனர். அவ்வாறு ஆர்வத்துடன் இருக்கின்றவர்களின் வாக்குப் பதிவுகளை பலவந்தமாக நீக்கியமை மிகவும் பாரதூரமான மனித உரிமை மீறலாகும்.

இவ்வாறு, வாக்காளர் பதிவு நீக்கப்பட்டவர்களுக்கு இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் தற்பொழுது வாக்குகள் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டின் பிரஜை ஒருவருக்கு வெவ்வேறு இடங்களில் வீடுகள் இருப்பதற்காக, சொந்த மாவட்டத்திலுள்ள வாக்காளர் இடாப்பை மாற்ற முடியாது. கொழும்பில் வசிக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, மெதமுலானையில் வாக்களிக்கிறார். முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அத்தனகல்ல மற்றும் பொலனறுவையிலேயே வாக்களிக்கின்றனர்.

அவர்களுக்கு இவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியுமென்றால் ஏன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு, புத்தளத்தில் வாழும் சாதாரண மக்களுக்கு வாக்குரிமையை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது?

எனவே, மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரால் வாக்களிப்பதற்கு தடுக்கப்பட்ட ஏழாயிரத்து 727 வாக்காளர்களையும் அவர்களது சொந்த மாவட்ட வாக்காளர் இடாப்பில் மீளப் பதிவுசெய்து, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்க வேண்டும்.

இதன்படி, மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட இரண்டாயிரத்து 618 பேர், முசலி பிரதேச சபைக்கு உட்பட்ட மூவாயிரத்து 452 பேர், மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட ஆயிரத்து 217 பேர், நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட 457 பேர் மற்றும் மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட 342 வாக்காளர்களையும் சொந்த மாவட்டத்தில் வாக்களிக்க ஆவன செய்ய வேண்டும்" என ரிஷாட் பதியுதீன் கோரியுள்ளார்.(ம-03,285)

# பாராளுமன்ற அதிகாரிகள் ஐவருக்கு கொரோனா

பாராளுமன்ற கொரோனா பரவலை அடுத்து கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற அதிகாரிகள், பணியாளர்களுக்கு மேற்கொண்ட பி.சி. ஆர் பரிசோதனையில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பாராளுமன்ற அதிகாரிகளில் ஐவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று 16 பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற அதிகாரிகள் சிலர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

பாராளுமன்ற பணியாளர்களுடன் பாராளுமன்ற பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட 448 பேர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தநிலையில் இவர்களில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)


## கண்ணீர் அஞ்சலி



பளை மத்திய கல்லூரியில் கல்வி கற்பிக்கும் திருமதி பிரியதர்ஷினி சுதர்சன் அவர்களின் அன்பு மாமியார்

அமரர்

நவரத்தினராஜா தங்கராணி

பிறப்பு 15.08.1957

இறப்பு 13.01.2021

அவர்கள் கடந்த 13.01.2021 அன்று காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்
கிளி / பளை மத்திய கல்லூரி



## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

TVS SCOOTY ( UI XXXX ) எனும் தொடர் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

(5289)

077 203 0309



## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (5221)

070 640 5951

e-mail : engchelvam@gmail.com


# கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில்

## 154 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் 154பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக தொற்றுநோயியல் வைத்தியசாலை தகவல் வெளியிட்டுள்ளது.

வடக்கு மாகாண தொற்று நோய் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள கோவிட்19 சிகிச்சை நிலையத்தில் 154 பேர் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களில் 96 ஆண்களும், 58 பெண்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 5-13 வயதுடையவர்கள் இருவரும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏழுபேரும் அடங்குவதுடன் ஏனையோர் இடைவயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சிகிச்சை நிலையத்திலிருந்து சிகிச்சை பெற்று 18 பேர் வெளியேறுவதாகவும் குறித்த வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோவிட் 19 சிகிச்சை நிலையமாக கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தில் அமைந்துள்ள தொற்று நோய் வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-03,100,312)

# பொத்துவில் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் மீது வாள்வெட்டு தாக்குதல்

(மட்டக்களப்பு)

பொத்துவில் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் பொத்துவில் பிரதேச சபையின் பிரதி தவிசாளர் ஊறணியிலுள்ள அவரது விடுதியில் தங்கியிருந்தபோது விடுதியில் உள்நுழைந்த குழுவினர் அவர் மீது வாள் மற்றும் பொல்லால் தலையில் தாக்கிவிட்டு தப்பி ஓடியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03)

# பல கோடி பெறுமதியான " கஜமுத்து " விழுங்கியவர்

## முல்லை வைத்தியசாலையில் அனுமதி

(முல்லைத்தீவு)

பல கோடி ரூபாய் மதிப்புடைய 'கஜமுத்து' எனப்படும் யானை தந்தத்திலிருந்து கிடைக்கும் முத்தை விழுங்கிய நிலையில் ஒருவர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கஜமுத்துக்களை கடத்த முயன்ற இருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவர் முத்து ஒன்றை விழுங்கிய நிலையிலேயே வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரும் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் சிறப்பு அதிரடிப் படையில் முன்னர் பணியாற்றியவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சந்தேக நபர் கதிர்வீச்சு பரிசோதனைக்கு உட்படுத்திய போது வயிற்றுப் பகுதியில் முத்து காணப்படுவதாக சட்ட மருத்துவ வல்லுநர் க.வாசுதேவ அறிக்கையிட்டுள்ளார்.

அதனால் சந்தேக நபரின் வயிற்றில் காணப்படும் முத்து மலம் மூலம் வெளியேறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)


## காலநீடிப்பு

### படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2021

யாழ். மாநகர சபையில் படவரைஞர்களாகப் பதிவு செய்பவர்கள், பதிவுகளை புதுப்பிப்பவர்கள் எதிர்வரும் 22.01.2021 வரை தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை அறியத் தருகின்றேன்.

குறிப்பு : மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பிக்கவும் தவறுபவர்கள் அதன்பின் பதிவுகளை மேற்கொள்ள முடியாது.

முதல்வர்,
யாழ். மாநகர சபை.

(C-1173)

# சிங்கள பௌத்த நாட்டில் சிறுபான்மையினருக்கு இடமளிக்கக் கூடாது - தேரர் எச்சரிக்கை


(கொழும்பு)

**தமிழ், முஸ்லிம் மக்களை உயர் பதவிகளுக்கு தெரிவு செய்தால் இன்னும் சில ஆண்டுகளில் அனைத்து உயர் பதவிகளும் தமிழ், முஸ்லிம் மக்களுடையதாக இருக்கும். இது சிங்கள மக்களை அழிக்கும் திட்டமாகவே இருக்கும் என ஹெல பொது சவிய அமைப்பு தெரிவித்துள்ளது.**

இலங்கை பொலிஸ் துறையின் சட்டப் பிரிவை வலுப்படுத்த 150 சட்டத்தரணிகளை பொலிஸ் தலைமை ஆய்வாளர் பதவிக்கு நியமிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதுடன், அங்கு தமிழ் மொழி புலமைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கை முழுவதும் உள்ள அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் அவர்களைப் சேவையில் ஈடுபடுத்துவதே அதற்கான காரணம் ஆகும்.

இருப்பினும் ஹெல பொது சவிய அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதமொன்றில் சிங்கள பௌத்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் இளம் சட்டத்தரணிகளுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவதை புறக்கணிக்குமாறு தெரிவித்துள்ளது.

அத்தோடு அரச அதிகாரிகளை பணியில் சேர்த்துக் கொள்ளும் போது இனம், மதம் மற்றும் மொழி அடிப்படையில் பாகுபாடு காண்பது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்றும், இந்த 150 பேரை போட்டித் தேர்வு நடத்தாமல் நேரடி நேர்காணல்கள் மூலம் தேர்ந்தெடுப்பது பொருத்தமானதல்ல என்றும் ஹெல பொது சவிய அமைப்பு ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளது.



மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு 5 வருட காலம் நாட்டை ஒப்படைத்தது இதுபோன்ற சூழ்நிலையை எதிர்பார்த்து அல்ல என அந்த அமைப்பின் தலைவர் புதுகல ஜினவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சேர்ப்பு நடைபெற அனுமதிக்கப்பட்டால், இன்னும் 10-15 ஆண்டுகளில், அனைத்து உயர் பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் முஸ்லிம்களாகவும் தமிழர்களாகவும் மாறும் அபாயம் இருக்கும் என்று கூறும் புதுகல ஜினவங்ச தேரர் இது சிங்கள பௌத்த மக்களை அழிக்க ஒரு சதித்திட்டத்தின் மற்றொரு பகுதியாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார். (நி-4)

## பாராளுமன்ற ஆளும்கட்சி காரியாலயம் மூடப்பட்டது

(கொழும்பு)

பிரதமரின் மேலதிக செயலாளரும், பாராளுமன்றத்தின் ஆளும் கட்சி பிரதம கொறடாவின் செயலாளருமான சட்டத்தரணி சமிந்த குலரட்னவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து பாராளுமன்றத்திலுள்ள ஆளும் கட்சி பிரதம கொறடாவின் அலுவலகமும், பாராளுமன்ற உறுப்பினர்கள் சேவை அலுவலகமும் மூடப்பட்டுள்ளதுடன் அலுவலக பணியாளர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

## பூஜித, ஹேமசிறி ஆகியோருக்கான வழக்கு விசாரணை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஆகியோர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றம் திகதி நிர்ணயித்துள்ளது. குறித்த 12 அடிப்படை உரிமை மனுக்களை எதிர்வரும் மார்ச் 8, 9, 10 ஆகிய திகதிகளில் ஏழு நீதியரசர்கள் கொண்ட குழு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற போதே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

## வடக்கோடு கிழக்கை இணைக்க முற்படுவது மீளவும் தமிழ் மக்களை ஏமாற்றும் செயல்

(கொழும்பு)

முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் புறக்கணித்துவிட்டு கிழக்கை வடக்கோடு இணைக்க முற்படுவது மீளவும் தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே அமையும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான எம்.ரி.ஹஸன் அலி நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் அரசியல் நிலவரம் தொடர்பில் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிழக்கு முஸ்லிம்கள் வடக்கு முஸ்லிம்களோடு மட்டுமன்றி முழு நாட்டு முஸ்லிம்களினதும் அரசியல் நிரந்தர கௌரவ அந்தஸ்தைப் பெறும் முயற்சியை இப்போதே மேற்கொள்ள வேண்டும்.

நிபந்தனையற்ற ஆதரவை முஸ்லிம்கள் வழங்க முடியாது. இணைப்பு நிரந்தரமானால் தான் தமிழ் சகோதரர்கள் நிம்மதியாக வாழ முடியும்.

அத்தோடு இது கிழக்கு மக்களின் விருப்பைக் கேளாமல் வடக்கோடு அவர்களை இணைத்துவிடும் செயலுமாகும்.

அத்தோடு கிழக்கு மக்களின் அரசியல் உரிமைகளையும் அவமதிக்கும் செயலாகும். இணைப்பின் பின் கிழக்கு பிரிய வேண்டுமா? எனத் தீர்மானிக்கும் பொறுப்பை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் கிழக்கு மக்களிடமே விட முயல்வது கிழக்கில் இரத்தக் களரியைத் தோற்றுவிக்க முயலும் விடயமாகும்.

எனவே, இணைப்பு நிகழுமாயின் முஸ்லிம்களுக்கான ஆகக் குறைந்த பாதுகாப்பு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபையே என அஷ்ரப் வலியுறுத்தி நின்றார்.

ஓர் உண்மைப்போராளி சுய அடிப்படை உரிமை விடயத்திலும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பதற்கு இது எடுத்துக்காட்டாக உள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் இதயம் அம்பாறை மாவட்டமே. ஆனால் அது இன்று பெரும் சூனியப் பிரதேசமாக மாறியிருக்கிறது என்பது ஜீரணிக்க முடியாத உண்மை நிலவரமாகும் என்பதை அழுத்தமாகக் கூறலாம் என்றும் தெரிவித்தார். (நி-4)

## அரசாங்கத்திற்கு பொறுப்புக்கூறல் விடயத்தில் கால அவகாசம் வழங்கக்கூடாது

(முறிகண்டி)

எந்தவொரு புதிய தீர்மானங்களும் பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்கக் கூடாது.

அத் தீர்மானமானது இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அல்லது விசேடமாக நிறுவப்பட்ட சர்வதேச தீர்ப்பாயத்தின் முன் கொண்டு சென்று நிறுத்த உதவ வேண்டும் என வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பில் ஐ.நா. உயர்ஸ்தானிகர் மற்றும் இணைத் தலைமை நாடுகளுக்கும் அனுப்பிய கடிதத்திலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்க தலைவி கலாரஞ்சினி கருத்து தெரிவிக்கையில்,

இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதானது அதனை தண்டனையிலிருந்து தப்பிக்க வழிசெய்வதுடன், இலங்கை அரசின் கொடுமையான சட்டங்களாலும் தமிழர் தாயக பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவ பிரசன்னத்தாலும் தமிழ் மக்களிற்கு எதிரான வன்முறைகளிற்கு வழிசமைக்கும்.

இலங்கையில் நீண்டகாலமாக புரையோடிக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்காக சர்வதேசத்தால் ஒழுங்கமைக்கப்படுவதும், கண்காணிக்கப்படுவதுமான ஒரு சர்வஜன வாக்கெடுப்பினை நடத்தி இலங்கை அரசினால் தமிழ் மக்களிற்கு எதிராக நடைபெற்ற அநீதிகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும்.

யுத்தத்தினால் தாரத்தை இழந்த 90,000 தமிழ் பெண்களின் நிலை தொடர்பாக, குழந்தைகள் உட்பட காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிதல் தொடர்பான நிலைப்பாடுகள், தமிழ் அரசியல் கைதிகளின் நிலை தொடர்பாக, பல்வேறு வகையான நிலஅபகரிப்பு, இராணுவ பிரசன்னம் மற்றும் சர்வதேச குற்றங்கள் தொடர்பான பொறுப்புக் கூறுதல் சம்பந்தமான நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை ஐ.நாவிலிருந்து பெற வேண்டும் என மேலும் தெரிவித்தார். (5-4-100)

## 'மாஸ்டர்' பார்க்க சென்றவருக்கு கொரோனா



(திருமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள திரையரங்கொன்றில் திரையிடப்பட்ட மாஸ்டர் தமிழ் திரைப்படத்தைப் பார்ப்பதற்கு ஏராளமானோர் சென்றிருந்தனர்.

அவ்வாறு வருகை தந்திருந்த பார்வையாளர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இந்தியா- அவுஸ்திரேலியா இறுதி டெஸ்ட் முதல் நாள் ஆட்ட முடிவில் ஆஸி 274- 5


இந்தியா மற்றும் அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின், முதல்நாள் ஆட்டம் நேற்று நிறைவுக்கு வந்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலியா அணி, ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஆட்டநேர முடிவில் கெமரூன் கிரின் 28 ஓட்டங்களுடனும் டிம் பெய்ன் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

பிரிஸ்பேன் மைதானத்தில் நேற்று ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 274 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.



இதன்போது அவுஸ்திரேலியா அணி சார்பில், டேவிட் வோர்னர் ஒரு ஓட்டத்துடனும் மார்கஸ் ஹரிஸ் 5 ஓட்டங்களுடனும் மார்னஸ் லபுஸ்சேகன் 108 ஓட்டங்களுடனும் ஸ்டீவ் ஸ்மித் 36 ஓட்டங்களுடனும் மத்தியூ வேட் 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணியின் பந்துவீச்சில், நடராஜன் 2 விக்கெட்டுகளையும் மொஹமட் சிராஜ், சர்துல் தாகூர் மற்றும் வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

இன்னமும் 5 விக்கெட்டுகள் மீதமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாவது நாளில், இன்று அவுஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடவுள்ளது. (4)

# 135 ரன்னில் சுருண்டது இலங்கை

காலி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 135 ரன்னில் சுருண்டது.

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் காலி மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. டாஸ் வென்ற இலங்கை அணி பட்டிங் தேர்வு செய்தது. தொடக்க வீரர் திரிமான்னே 4 ரன்னிலும், குஷால் பெரேரா 20 ரன்னிலும் ஆட்டமிழந்தார்.




அடுத்து வந்த குஷால் மெண்டிஸ் ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார். அனுபவ மத்யூ 27 ரன்களும், சண்டிமல் 28 ரன்களும் எடுத்தனர். ஆனால் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் டாம் பெஸ் விக்கெட்டுகளாக சரிக்க இலங்கை அணி 135 ரன்னில் சுருண்டது. அந்த அணியால் 46.1 ஓவர்கள் மட்டுமே சந்திக்க முடிந்தது.

இங்கிலாந்து அணி சார்பில் டாம் பெஸ் 10.1 ஓவரில் 30 ரன்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தினார். ஸ்டுவர்ட் பிராட் 9 ஓவரில் 20 ரன்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட் வீழ்த்தினார். (4)

# ஆரம்ப ஆட்டத்தில் அசத்திய நடராஜன்

களமிறங்கிய முதல் டெஸ்ட் போட்டியிலேயே விக்கெட் வீழ்த்தி அசத்தியுள்ளார் இந்திய வீரர் நடராஜன்.

இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 4 ஆவது டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய கிரிக்கெட் அணி வீரர் நடராஜன் விளையாடியுள்ளார்.

நடராஜன் ஏற்கனவே ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ள நிலையில் இதுவே அவர் விளையாடும் முதல் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டியாகும்.

இந்த நிலையில் தான் பங்கேற்ற முதல் போட்டியிலேயே அசத்தியுள்ளார் நடராஜன். அதன்படி மத்யூ வேட், லபுஷேன் ஆகியோரின் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளனர். (4)

# அஸ்வினால் மட்டுமே எனது சாதனையை முறியடிக்க முடியும்

800 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய ஒரே பந்து வீச்சாளர் இலங்கை ஜாம்பவான் முத்தையா முரளிதரன். தற்போதைய வீரர்களில் இந்தியாவின் ரவிச்சந்திரன் அஸ்வின் மட்டுமே தனது சாதனையை மிஞ்ச முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் 2010 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இலங்கை ஜாம்பவான் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இந்நிலையில் அண்மையில் The Telegrap இற்கு முரளிதரன் அளித்த பேட்டியில் கூறியதாவது.

அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தி தற்போதும் விளையாடி வரும் அவுஸ்திரேலிய சுழல் பந்து வீச்சாளரான நாதன் லியோன், தனது சாதனை மிஞ்ச 'போதுமானதாக இல்லை' எனவும் அஸ்வின் ஒரு சிறந்த பந்து வீச்சாளர் என்பதால், 800 விக்கெட் சாதனையை மிஞ்ச அவருக்கு வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தவிர வேறு எந்த இளம் பந்து வீச்சாளரும் 800 விக்கெட்டுகளை கைப்பற்ற முடியும் என்று நான் நினைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

நாதன் லியோன் போதுமானவராக இல்லை. அவர் 400 விக்கெட்டுகளுக்கு அருகில் உள்ளார். ஆனால் 800 விக்கெட்டுகளை கைப்பற்ற அவர் இன்னும் பல பல போட்டிகளில் விளையாட வேண்டியிருக்கும் என முரளிதரன் தெரிவித்துள்ளார்.

34 வயதான தமிழக சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் 74 டெஸ்ட் போட்டிகளில் 377 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

அதேநேரத்தில் 33 வயதான அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் லியோன், 99 டெஸ்ட் போட்டிகளில் 396 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

முரளிதரன் 133 டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# பிரிஸ்பேன் டெஸ்டில் நடராஜன்




பிரிஸ்பேன் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் தமிழக வீரர் நடராஜன் அறிமுக வீரராக களம் இறங்கியுள்ளார்.

அவுஸ்திரேலி யா-இந்திய அணிகளுக்கு இடையில் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியாவும் 2 ஆவது டெஸ்டில் இந்தியாவும் வெற்றி பெற்றது. 3 ஆவது டெஸ்ட் டிராவில் முடிந்தது.

4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் பிரிஸ்பேன் நகரில் நேற்று ஆரம்பமானது. இந்திய அணியில் விஹாரி, ஜடேஜா விளையாடாதது உறுதி செய்யப்பட்ட ஒன்று. ஆனால் பும்ரா, அஸ்வின் ஆகியோரும் இடம்பெறுவார்களா? என்பதுதான் கேள்வியாக இருந்தது.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் தமிழக வீரர் நடராஜன் களம் இறங்கியுள்ளார். (4)

## தொழிற்சாலை ஊழியர்களுக்கு கொரோனா

(கொழும்பு)

மீகொடயிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 55 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஹோமாகம சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை 26 ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஏழு ஊழியர்களுக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஊழியர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, தொற்றாளர்களுடன் நெருங்கிய வட்டாரத்திலுள்ளவர்களைத் தனிமைப் படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

## சில நாடுகளில் பரவும் நிபா வைரஸ் தீவிர கண்காணிப்பில் இலங்கை

(கொழும்பு)

**உலக நாடுகள் சிலவற்றில் நிபா வைரஸ் கண்டறியப்பட்டுள்ள நிலையில், அந்த வைரஸ் தொடர்பில் நாட்டை தீவிரமாக கண்காணித்து வருவதாக பொதுச் சுகாதார சேவைகளின் துணை பொது பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

நிபா வைரஸ் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்தவும் வைரஸின் பிறழ்ந்த பாதிப்புகளைக் கண்டறியவும் நடவடிக்கை எடுக்கும் போது, நிபா வைரஸ் உட்பட பிராந்தியத்தில் பரவும் பிற வைரஸ்களை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

எவ்வாறாயினும், கடுமையான நடவடிக்கை எடுக்க இலங்கைக்கு உலக சுகாதார அமைப்பிலிருந்து எந்த பரிந்துரையும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் நாங்கள் நிலைமைகளை கண்காணித்து வருகிறோம்.

வைரஸ் தொடர்பான எந்தவொரு தகவலையும் உலக சுகாதார நிறுவனம் இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளும்.

தொற்றுநோயியல் பிரிவு மற்றும் சுகாதார அமைச்சின் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு ஆகியவை பிற நாடுகளில், குறிப்பாக பிராந்தியத்தில் வைரஸ்கள் பரவுவதால் ஏற்படும் பாதிப்புகளை கண்காணித்து வருகின்றது.

அவை சர்வதேச சுகாதார விதிமுறைகள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு மையப்புள்ளியாகும். மற்ற நாடுகளில் நோய் பரவுவதை அவை கண்காணிக்கின்றன.

எந்தவொரு வைரஸிலிருந்தும் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருந்தால் அது குறித்து தொற்றுநோயியல் பிரிவு மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு தெரிவிக்கும் என்று அவர் தெரிவித்தார். (நி-4)

## சிறைச்சாலை கொத்தணி அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலை கொத்தணியில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4,282 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை, புதிதாக 8 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை தொடர்ந்தே இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சிறைச்சாலைக் கொத்தணியில் குணமடைந்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,868 ஆக காணப்படுகின்றது. (நி-4)

## போக்குவரத்து அபராத கட்டணங்கள் செலுத்தும் கால எல்லை நிறைவு

(கொழும்பு)

கொரோனா அச்சம் காரணமாக காலம் நிறைவடைந்த போக்குவரத்து அபராத பத்திரங்களுக்கான அபராத கட்டணங்களை செலுத்துவதற்காக வழங்கப்பட்ட சலுகைக்காலம் நேற்றுடன் நிறைவடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கொழும்பு மாநகராட்சி போக்குவரத்து பொலிஸ் பிரிவினராலும் பொலிஸ் அவசரகால பதிலளிப்பு பிரிவினராலும் வழங்கப்பட்ட அபராத பத்திரங்களுக்கான கட்டணங்களை செலுத்த எதிர்வரும் 8 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸாரின் வேண்டுகோளுக்கமைய இவ்வாறு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (நி-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 32 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய 32 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசாரணைகள் நிறைவுபெற்ற 08 ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன், சுமார் 241 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

## ரஞ்சன் ராமநாயக்கவின் பிரஜாவுரிமை இரத்து



(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்க தண்டனையை நிறைவு செய்யும் நாள் முதல் 7 வருடங்களுக்கு அவருடைய பிரஜாவுரிமை இரத்துச் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மஹானாமஹேவா இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இந்த காலப் பகுதியில் அவருக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினால், அவருக்கு மீண்டும் அந்த சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட 4 வருட சிறைத் தண்டனை மற்றும் 7 வருட பிரஜாவுரிமை இரத்து ஆகிய காலப் பகுதிகள் நிறைவடைந்ததன் பின்னரே அவருக்கு தேர்தல்களில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்ப்புக்கு அமைய சுமார் 11 வருடங்கள் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு தேர்தல்களில் போட்டியிட முடியாது என பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மஹானாமஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)


4ஆம் ஆண்டு நினைவுக் கிரியை

அழைப்பு



மலர்வு 1926.04.12

உதிர்வு 2017.01.31

அமரர்

திரு.கார்த்தி கதிரவேலு

கடந்த 31.01.2017 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கு அமரர். திரு. கார்த்தி கதிரவேலு அவர்களின் சிவபதப்பேறு குறித்த நான்காம் ஆண்டு நினைவுக் கிரியைகள் இன்று 16.01.2021 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இல.222 நாவலர் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா. (5281)

இங்ஙனம் குடும்பத்தினர்.

# சிவத்தமிழ் செல்வியின் உரை கேட்டு மிருக பலியிடல் நிறுத்தப்பட்டது

## கலாநிதி ஆறு.திருமுருகன் புகழாரம்

(குப்பிழான்)

தங்கம்மா அப்பாக்குட்டி சென்ற இந்துக்கோயில்கள் எல்லாம் மாற்றம் பெற்றன என்ற செய்தியினால் பல கோயில்களில் மிருக பலிகளை நிறுத்தினார்கள்.

எத்தனையோ கோயில்களில் போராட்டங்கள் மேற்கொண்டு வேள்விகளை நிறுத்திய காலத்தில் பெண்மணியொருவரின் உரையினாலே இந்தச் சமுதாயத்தில் வேள்விகள் நிறுத்தப்பட்டமையை நினைத்துப் பார்க்க வேண்டும் என தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத் தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

உலகம்போற்றும்அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 96 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா அண்மையில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிருக பலிகள், சின்ன மேளங்கள் நடத்திய கோயில்கள் எல்லாம் தங்கம்மா அப்பாக்குட்டியின் உரைகளினால் திருந்தியதாக அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் அதிபராகவிருந்த கவிஞர் கந்தவனம் 1970 ஆம் ஆண்டளவில் பாடல்கள் பாடினார்.

சின்னமேளம், சிறுகளியாட்டம், வேண்டத் தகாதவையெல்லாம் வேள்வி எனும் பேரில் வீதிகளில் நடந்த காலம் போச்சு...போச்சு தங்கம்மா என்னும் பெருவிருட்சம் எழுந்து நிற்க கோயில்கள் எல்லாம் இன்று புனிதம் பெற்றது எனவும் அவர் அந்தப் பாடலில் குறிப்பிடுகிறார். தங்கம்மா அப்பாக்குட்டி சென்ற கோயில்களெல்லாம் மாற்றம் பெற்றன என்ற செய்தி பரவியமையால் பல கோயில்களில் வேள்விகள் நிறுத்தப்பட்டன என அவர் தெரிவித்தார். (5-18)



தென்மராட்சி-கச்சாய் சர்வமதங்கள் ஒன்றியத்தின் அனுசரணையில் யா/கச்சாய் மகாவித்தியாலய மாணவர்களுக்கு ஒருதொகை முகக்கவசங்கள் மற்றும் தொற்று நீக்கிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அப் பொருட்களை ஒன்றியத்தின் பிரதிநிதிகள் பாடசாலை அதிபரிடம் கையளித்தனர். (5-30)

# எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்களை மறித்து எழு மாறாக பி.சி.ஆர். பரிசோதனை நேற்றுக்காலை மேற்கொள் எப்பட்டுள்ளது.

இதன்போது 70 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்த பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கடந்த வாரம் எழுதுமட்டுவாழ் பகுதியில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது தென்மராட்சி-மந்துவில் பகுதியைச் சேர்ந்த தொற்றாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# நிர்வாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய தரும பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் ஆலய மண்டபத்தில் தலைவர் மு.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவின் போது க.நாகேந்திரன் தலைவராகவும் மு.பத்மநாதன் உபதலைவராகவும் இ.கிருபாகர சூரியன் செயலாளராகவும் நா.தவகுலரட்ணம் உப செயலாளராகவும் வ.ரவிதாஸன் பொருளாளராகவும் தெரிவாகியதுடன் 15 பேர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# நல்லூர் பிரதேசசபை பாதீடு வெற்றி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நேற்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் விசேட கூட்டம் புதிய தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் நேற்றுக் காலை சபை மண்டபத்தில் இடம்பெற்றது. சபையின் தவிசாளரினால் திருத்தியமைக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான பாதீடு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சபையில் இடம்பெற்ற வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

இதன்போது 20 உறுப்பினர்களைக் கொண்ட நல்லூர் பிரதேச சபையில் 13 உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாகவும், எதிராக இரண்டு உறுப்பினர் களும் வாக்களித்ததுடன், மூன்று உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

ஒரு உறுப்பினர் மேற்படி கூட்டத்திற்கு வருகை தரவில்லை என்பதுடன் மற்றொரு உறுப்பினரின் பதவி வெற்றிடமாகவுள்ளது.இந் நிலையில் பாதீடு வெற்றிபெற்றது.(5-18-33)

# சட்ட விரோத மணல் அகழ்விற்கு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்கரைகளை அண்மித்த பகுதிகளில் பரவலாக இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மறவன்புலோ, கெற்பேலி, பாலாவி, மிருசுவில் வடக்கு, நாவற்குழி கிழக்கு, சந்திரபுரம், வரணி வடக்கு, நாவற்காடு, கரம்பைக்குறிச்சி மற்றும் மந்துவில் வடக்கு ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்ட விரோத மணல் அகழ்வை உடனடியாக தடுத்து நிறுத்தி தென்மராட்சியின் மண் வளத்தினைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் பிரதிநிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சாவகச்சேரிக்கும்- கெற்பேலிப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதிகளில் மூன்று இராணுவ முகாம்கள் காணப்படுகின்ற போதிலும் தொடர்ச்சியாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும், மணல் அகழ்வைத்தடுத்து நிறுத்துமாறு இராணுவத்தினரைக் கோரிய போதிலும் தமக்கு அதற்கான அனுமதி இல்லை எனப் பதிலளித்திருப்பதாகவும் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் நோக்கில் பிரதேச செயலகத்தினர் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை இணைத்து இரண்டு கலந்துரையாடல்கள் மேற்கொண்டுள்ள போதும் மணல் அகழ்வை முழுமையாக தடுத்து நிறுத்த முடியவில்லை எனத் தென் மராட்சி பிரதேச செயலகத்தினரால் தெரிவிக்கப்பட்டது. (5-30)

# பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இன்று 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆளுமைத் திறனுக்கப் பயிற்சி ஆரம்பிக்கப்படுகிறது.

பயிற்சியினை மன்றத்தின் செயலாளரும் துணைப்பேராசிரியருமான த.நந்தகுமரன் வழங்குவார். எனவே புதிய பயிற்சியாளர்கள் தங்களது பதிவினை மேற்கொண்டு பயிற்சியில் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு அறிவுத் திருக்கோவிலின் 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5)

# நினைவுத் தூபிக்கான அத்திபாரப் பணிகள் ஆரம்பம்

(நல்லூர்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர் மாணிக்கப்பட உள்ள முள்ளிவாய்கால் நினைவுத் தூபிக்கான அத்திபாரம் வெட்டும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான வேலைகளை பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்கால் நினைவுத் தூபி கடந்த 8 ஆம் திகதி இரவு பல்கலைக்கழக நிர்வாகத்தினால் இடித்து அழிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து தொடர் எதிர்ப்பு போராட்டத்தை முன்டுத்திருந்தனர்.

பின்னர் சில மாணவர்களால் உணவு தவிர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்களின் போராட்டத்திற்கு உலகின் பல இடங்களில் இருந்தும் ஆதரவு பெருகியது இதனால் கடந்த 11 ஆம் திகதி, தூபி இடித்து அழிக்கப்பட்ட அதே இடத்தில் மீண்டும் தூபி அமைப்பற்கு மாணவர்களின் பங்கு பற்றலோடு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குண ராசாவினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நேற்று அத்திபாரம் வெட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(அராலி)

சங்கானை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எனவே பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக நிர்வாக உறுப்பினர்களான தலைவர், செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் , உபதலைவர் மற்றும் உபசெயலாளர் ஆகியோரை தவறாது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (5-104)

# பி.சி.ஆர்.பரிசோதனைகளில் முடக்கம் ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் தற்போது முடக்கம் ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ ஆய்வக தொழில்நுட்பவியலாளர்கள் உற்பத்திகளின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளை எந்த ஆய்வகத்துக்கு அனுப்புவது என்பது தொடர்பில் சிக்கல் எழுந்துள்ளது.

தற்போது பி.சி.ஆர்.மாபியா தொடர்பில் குற்றப்புலனாய்வு துறையினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அந்த விசாரணைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதை ஆராய வேண்டியது அவசியமாகும்.

எனவே மாபியாக்கள் உருவாகுவதற்கு இடமளிக்காதீர்கள் என அரசாங்க ஆய்வகத்தினருக்கு நாம் தெளிவாகக் கூறிக்கொள்கிறோம்.

அரச இராசாயன ஆய்வகங்கள் ஒருபோதும் இடைநிறுத்துவதற்கு இடமளிக்களிக்கப்படுவதில்லை. எனினும் சுகாதார அமைச்சு மற்றும் அதற்கான வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் தரப்பினர் எந்தளவு பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள் என்பதில் எமக்கும் பிரச்சினைகள் காணப்படுகின்றன எனவும் தெரியப்படுத்தினார். (நி-4)

# ஜோன்ஸ்டனுக்கு எதிரான வழக்கு சட்டத்திற்கு முரணானது

## கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

**அரசாங்கத்திற்கு நான்கரை கோடி ரூபாயை நட்டம் ஏற்படுத்தியதாய் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோக்கு எதிராக இலஞ்ச ஆணைக் குழுவால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விதம் சட்டத்திற்கு முரணானது என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன நேற்று தீர்ப்பளித்துள்ளார்.**

குறித்த வழக்கிற்கு எதிராக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தாக்கல்செய்த மனுவை ஏற்றுக் கொண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டள்ளது.

2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரை வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது, சதொச நிறுவனத்தின் 153 ஊழியர்களை நீக்கி அவர்களை அரசியல் செயற்பாடுகளில் ஈடுப்படுத்தியமையின் ஊடாக, அரசாங்கத்திற்கு நான் கரை கோடி ரூபா நட்டம் ஏற்பட்ட தாக தெரிவித்து முன்னைய அரசாங்கக் காலப் பகுதியில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வால் அமைச்சர் ஜோன்ஸ்டனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட விதம் சட்டத்திற்கு முரணானது என தெரிவித்து அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டனர்.

இருப்பினும் குறித்த அடிப்படை எதிர்ப்பு மனுக்களை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு எதிராக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எதிர்ப்பு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அவரின் எதிர்ப்பு ம்னுவை விசாரித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு சட்டத்திற்கு முரணானது எனத் தீர்ப்பளித்தார். (நி-4)

# சுய தனிமைப்படுத்தலில் வைத்தியர் பாதெனிய



(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளருடன் நெருங்கி பழகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினைத் தொடர்ந்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனுருத்த பாதெனிய சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அவரே இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அவரின் வீட்டில் கடந்த தினம் இடம்பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்ட வைத்தியர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாதெனிய தொற்றாளருடன் நெருங்கிப் பழகியவராக அடையாளம் காணப்பட்டார். (நி-4)

# கடற்படையின் பிரதானியாக சுமித் வீரசிங்க நியமனம்

(கொழும்பு)


இலங்கை கடற்படையின் பிரதானியாக ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். இன்று ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பெறுப்பேற்கவுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளார்.



சுமித் வீரசிங்க தனது புதிய நியமனத்திற்கு முன்னர் மேற்கு கடற்படைத் தளத்தின் தளபதியாகவும் கடற்படையின் துணைத் தளபதியாகவும் பணியாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# விமான நிலைய பாதுகாப்பை ஸ்திரப்படுத்த 20 மோப்ப நாய்கள் கடமையில்

(கொழும்பு)



கட்டுநாயக்க பண்டாநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பை மேலும் ஸ்திரப்படுத்துவதற்காக பயிற்றுவிக்கப்பட்ட 20 மோப்ப நாய்கள் நேற்று வெள்ளிக்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன.

பயணப் பொதிகள் எனத் தெரிவித்து பயணிகளால் இரகசியமான முறையில் கொண்டு செல்லப்படக்கூடிய வெடி பொருட்கள் மற்றும் போதைப் பொருட்கள் என்பவற்றை இனங்காண்பதற்காக இந்த நாய்களுக்கு அஸ்கிரியவிலுள்ள இலங்கை பொலிஸ் பயிற்சி பாடசாலையில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

இந்த நாய்கள் ஆபத்தான மருந்து கட்டுப்பாட்டு சபையினால் உண்மையான மாதிரிகளை பயன்படுத்தி நடத்தப்பட்ட நடைமுறை சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வாறான நடைமுறை சோதனை இலங்கையில் முதன்முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களின் பாதுகாப்பை மேலும் ஸ்திரப்படுத்துவதை இலக்காகக் கொண்டு விமானப்படையின் மோப்ப நாய்கள் படையணியை மேலும் பலப்படுத்துவதற்குச் சிவில் விமான சேவைக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய விசேட மோப்ப நாய்கள் 20 கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இதற்காக 22 மில்லியன் ரூபா நிதியை இலங்கை விமான சேவை அதிகாரசபை வழங்கியுள்ளது. சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட விமான நிலைய பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை அமுல்படுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் முன்னிலை வகிக்கிறது. அந்த விதிமுறைகளை மேலும்வலுப்படுத்துவதை இலக்காகக்கொண்டு இவ்வாறு மோய்ய நாய்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. (நி-4)


**நல்லூர் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம்**

**மக்கள் பார்வைக்கு**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு 15.01.2021 ஆம் திகதிய சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் தலைமை அலுவலகம், உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

திரு.ப.மயூரன்,
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில். (C-1171)



**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA,SRI LANKA**

**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**

**WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

POST OF RESEARCH ASSISTANT CUM PROJECT ASSISTANT (FULL TIME) - ON CONTRACT BASIS - 01

POST OF RESEARCH ASSISTANT (FULL TIME) - ON CONTRACT BASIS - 02

DEVELOPMENT ORIENTED RESEARCH (DOR) PROJECT - FACULTY OF GRADUATE STUDIES

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS - AHEAD Operation from suitably qualified persons up to 29.01.2021
The post carries all inclusive monthly salary of Rs.47,800/= in addition applicable EPF & ETF will be paid.
Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

(C-1172) Registrar

# வவுனியாவில் அதிகரிக்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை

(நெளுக்குளம்)
வவுனியா நகரப்பகுதிகளை சேர்ந்த 16 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்றுறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களிற்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் ஒரு பகுதி முடிவுகள் நேற்றுக் காலை வெளியாகியது.

அதனடிப்படையில்வவுனியா நகர வியாபார நிலையங்களில் பணிபுரியும் 16 பேருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த எண்ணிக்கையுடன் வவுனியா நகரப்பகுதியில் கடந்த ஒருவாரத்தில் மாத்திரம் 170 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை வவுனியா நகர்ப்பகுதிகளைச் சேர்ந்த மேலும் 500 பேரின் பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கப்பெற்ற பின்னர் நகரின் முடக்கம் தளர்த்தப்படும் என பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் மகேந்திரன் தெரிவித்துள்ளார். (5-4-250-299)

# நீர் வழங்கல் தடைப்படும்

(நெளுக்குளம்)
வவுனியா நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் உள்ள நீரிணைப்புக் குழாய்களில் அவசர பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் இன்று 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் இரவு 10 மணி வரை நீர் வழங்கல் செயற்பாடானது குறித்த பிரதேசங்களில் தடைப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் வவுனியா நகரம், குருமன்காடு, சூசைப்பிள்ளையார் வீதி மற்றும் வைரவப்புளியங்குளம் பகுதிகளில் குறித்த பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதால் குறித்த பகுதிகளில் நீர் வழங்கல் செயற்பாடுகள் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்குத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டார் அரச அதிபர்



(கண்டாவளை)
கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களை மாவட்ட அரசாங்க அதிபர் சென்று பார்வையிட்டு அவர்களுக்கான உடனடி தேவைக்குரிய உணவல்லாத பொருட்களையும்வழங்கிவைத்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர் தொடர்ந்தும் பாய்வதால் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றன.

இந்த நிலையில் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டை ஐயன்கோவிலடி கிராமம் முழுமையாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 10 வரையான குடும்பங்கள் முரசுமோட்டை அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியுள்ளன.

அவர்களை நேற்று மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உடனடி தேவைக்குரிய உணவு அல்லாத பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

இதில் கண்டாவளை பிரதேச செயலாளர் ட.ரீ.பிருந்தாகரன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.கோகுல்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண் டிருந்தனர். (5-4-315)



**கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி கற்று வரும் வறிய மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் கற்றல் உபகரணங்கள் கடந்த புதன்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனால் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.(படங்கள்:- யதுபாஸ்கரன்)**



**தாயகம் அறக்கொடை நம்பிக்கை நிதியத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தில் உள்ள 100 மாணவர்களிற்கும் 75 குடும்பங்களிற்கும் 350,000 ரூபாய் பெறுமதியான காலணிகள், சீருடைகள், பொங்கல் பொதிகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.**

# அக்கராயன்குளம் பகுதியில் 20 வீதம் ஆன நெற் பயிர் அழிவு

(அக்கராயன்)
கிளிநொச்சி அக்கராயன் குளம் வயல் நிலங்களை மூடி வான் பாய்வதால் 200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளதாக நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

அறுவடைக்குத் தயாரான நெற் பயிர்ச் செய்கையே கூடுதலாக அழிவடைந்துள்ளதாகவும் இவை தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டு அக்கராயன் கமநல சேவை நிலையத்திலும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் கையளிக்க உள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற் செய்கையில் 20 வீதமான நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளதாக கமநல சேவை நிலையங்களின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிய, பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பி வான் பாய்ந்ததன் காரணமாகவே நெற் பயிர்ச் செய்கை அழிவுகளை எதிர்கொண்டுள்ளதாகவும் மாவட்ட ரீதியாக கமநல சேவை நிலையங்கள் அழிவுகள் தொடர்பான விபரங்களைத் திரட்டத் தொடங்கி உள்ளதாகவும் நெற் பயிர்ச் செய்கை மட்டுமன்றி உப உணவுப் பயிர்ச் செய்கையும் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-350)

# ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வைத்தியரை நியமிக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)
முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு அம்பலவன் பொக்கணை, வலைஞர் மடம், மாத்தளன் ஆகிய கிராமங்களின் மக்கள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் 450 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இக் கிராம மக்கள் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்குச் செல்வதற்கு ஆறு கிலோ மீற்றர் தூரமும் முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குச் செல்வதற்கு பதினாறு கிலோ மீற்றர் தூரமும் பயணிக்க வேண்டி உள்ளது.



இந்நிலையில் அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வைத்தியர் ஒருவரை நியமிப்பதன் மூலம் இப்பகுதி மக்கள் நன்மையடைவார்கள். குறித்த வைத்தியரை நியமிக்குமாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் கூட்டங்களில் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

மாதந்தோறும் மகப்பேற்றுக்குரிய பெண்களுக்கான சிகிச்சைக்காக வைத்தியர்கள் வருகின்றார்கள். அம்பலவன் பொக்கணை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தரமாக பணிபுரிவதற்கு வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம் ஆகிய கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# இராசிபலன்

16.01.2021
தை 03, சனிக்கிழமை
திருதியை முற்பகல் 9.30 மணிவரை
அவிட்டம் முற்பகல் 7.21 மணிவரை
சுபநேரம் 3.34-5.04 மணிவரை
இராகுகாலம் 9.34-11.04 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூசம், சதுர்த்தி விரதம்

வளவன்



மேஷம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.



ரிஷபம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு உதவியவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும்.



மிதுனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், ஆன்றோர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



கடகம்

இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது.



சிம்மம்

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



கன்னி

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள்.



துலாம்

பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.



விருச்சிகம்

சந்தித்த நபர்களால் சந்தோசம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.



தனுசு

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.



மகரம்

அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொதுவாழ்வில் புகழ் கூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, விரயங்கள் கூடும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், மூத்த சகோதரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆனந்த வாழ்வுக்கு அடித்ளீதளம் அமைக்கும் நாள்.

நல்லது வரும் என்று தீயதைச் செய்யாதே

# சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

**சாட்சியாளர்களைப் பாதுகாக்கும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நீதியமைச்சு தீர்மானித்துள்ளது. நீதியமைச்சு அமைச்சின் ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி யு.ஆர்.டி. சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.**

குறித்த சட்டத்தின் முக்கிய இரண்டு சரத்துகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாகவே பிணை பெற்றுக்கொள்ள முடியும். இது அசாதாரண விடயமாக எமக்குத் தெரிகின்றது.

இந்த சட்டத்தின் கீழ், சிறு தவறுகளுக்காகவும் சாட்சியாளர்களும் சட்டத்தரணிகளும் அச்சுறுத்தப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

தற்போது மாகாணங்களிலுள்ள மேல் நீதிமன்றங்களுக்கு பிணை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்குமாறு கோருகின்றோம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# ஈ.ரி.ஐ. பணிப்பாளர்களுக்கு பிணை



(கொழும்பு)

ஈ.ரி.ஐ.நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர்களான ஜீவக எதிரிசிங்க, நாலக எதிரிசிங்க, அசங்க எதிரிசிங்க மற்றும் தீபா எதிரிசிங்க ஆகியோருக்கு நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கிக்கு வெளிப்படுத்தாமல் கணக்குகளைப்பேணி, குறித்த கணக்குகளில் வைப்பு செய்யப்பட்ட பணத்தை தமது சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தியதாக அவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மோட்டார் சைக்கிள் விபத்து; நால்வர் படுகாயம், கடைகள் சேதம்

(கல்முனை)

கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதி - களுதாவளை வீதி பிள்ளையார் ஆலயத்தடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் இரண்டு கடைகள் சேதமடைந்ததுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி விபத்துச் சம்பவமானது களுதாவளை பிரதான வீதியில் அமையப் பெற்றுள்ள வீதிப்பிள்ளையார் ஆலயத்தினை அண்மித்ததாக அமைந்துள்ள கடையை உடைத்துக் கொண்டே இடம்பெற்றுள்ளது.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது,

கல்முனையில் இருந்து மட்டக்களப்பை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டையிழந்து வீதியில் நடையில் சென்று கொண்டிருந்த நபருடன் மோதி வேகம் தணியாத நிலையில் கடையை உடைத்துக் கொண்டு உரிமையாளருடன் மோதியதில் இவ் விபத்து இடம்பெற்றதாக அறிய முடிகின்றது.

மேற்படி விபத்து சம்பவத்தில் இரண்டு கடைகள் சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உட்பட வீதியில் பயணித்த ஒருவரும் கடை உரிமையாளர் ஒருவர் அடங்கலாக மொத்தமாக நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (நி-4)

# கொரோனா தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பயன்படுத்தவுள்ள தடுப்பூசிகளை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் பெப்ரவரி மாதத்தில் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில் நாட்டில் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த கொண்டுவரவுள்ளதாகக் கூறப்படும் தடுப்பூசிகள் குறித்த நடவடிக்கைகள், தற்போதைய சுகாதார நிலைமைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பூசிகள் குறித்த பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டே வருகின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் இது குறித்த தூதரக மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் இங்கிலாந்தின் "ஒக்ஸ்போர்ட் -அக்ஸ்டோனிக்" தடுப்பூசிகளை இலங்கைக்கு பெற்றுக்கொள்ளவே பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளது. இந்நிலையில் இங்கிலாந்தின் இந்த தடுப்பூசிகளை இந்தியாவில் உற்பத்தி செய்வது குறித்த உடன்படிக்கை ஒன்று கைச்சாதிட்டப்பட்டுள்ளதை அடுத்து எம்மால் இந்த தடுப்பூசிகளை இந்தியாவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

எனவே இந்தியாவிடம் இருந்து கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுகொள்வது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளோம்.

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து இதற்கான உடன்படிக்கை மட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும், வெகுவிரைவில் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவே நாம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றோம்.



அதேபோல் தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டுவர முன்னர் இலங்கையில் நாம் என்ன செய்ய வேண்டும், களஞ்சியப்படுத்துவது எவ்வாறு, எத்தனை நாட்களுக்குள் தடுப்பூசிகளைப் பயன்படுத்த வேண்டும், எவ்வாறு சகல பகுதிகளுக்கும் இவற்றை பங்கிடுவது என்ற விடயங்கள் குறித்து தொற்றுநோய் தடுப்பு பிரிவின் விசேட வைத்தியர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் இப்போதே இது குறித்த ஆராய்வு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர் என வைத்தியர் தெரிவித்தார். (நி-4)

# இந்தோனேசியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்!

- 35 பேர் உயிரிழப்பு
- 600 இற்கு மேற்பட்டோர் காயம்
- பல கட்டங்கள் தரைமட்டம்
- மீட்புப் பணி தீவிரம்



(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவின் சுலவேசி தீவை ஒரே இரவில் உலுக்கிய பலத்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து குறைந்தது 35 பேர் உயிரிழந்ததோடு 600 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**



நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணிக்குப் பிறகு 6.2 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் போது வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்த ஆயிரக்கணக் கான மக்கள், அச்சம் காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். அத்துடன் நிலச் சரிவுகளைத் தூண்டிய இந்த நிலநடுக்கத்தினால் பல வீடுகள் அழிந்தன. (நி-4)

## கர்நாடகாவில் கோர விபத்து 11 பேர் பலி, பலர் காயம்




(டில்லி)

கர்நாடகாவின் தர்வாட் அருகே நேற்றுக் காலை ஏற்பட்ட வீதி விபத்தொன்றில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஹுப்பள்ளி-தார்வாட் பைபாஸ் வீதியில் லொறியொன்றும் டெம்போ வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியமையினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பத்து பெண்களும் டேம்போ வாகனத்தின் சாரதியும் உயிரிழந்துள்ளனர். மேலும் காயமடைந்த 6 பேர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)




**தலைநகர் பியாங்யாங்கில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நடைபெற்ற இராணுவ அணிவகுப்பின்போது வடகொரியா புதிய நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணைகளை காட்சிப்படுத்தியுள்ளது.**

**உலகின் மிக சக்தி வாய்ந்த ஆயுதம், நீர்மூழ்கிக் கப்பல் ஏவுகணைகள் ஒன்றன்பின் ஒன்றாக சதுக்கத்திற்குள் கொண்டுவரப்பட்டன. இது புரட்சிகர ஆயுதப்படைகளின் வலிமையை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாக வடகொரியாவின் கே.சி.என்.ஏ.செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

## தொடரும் உலகளாவிய கொரோனாத்தொற்று 20 இலட்சத்தைக் கடந்தது உயிரிழப்பு

(ஜெனிவா)

உலகளாவிய கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 20 இலட்சத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் வரை உலகளாவிய ரீதியில் 15 ஆயிரத்து 361 பேர் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்துள்ள நிலையில் இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 20 இலட்சத்தை கடந்துள்ளது.

அதிகபட்சமாக அமெரிக்காவில் 3 இலட்சத்து 97 ஆயிரத்து 994 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசிலில் 2 இலட்சத்து 7 ஆயிரத்து 160 பேர் உயிரிழந்துள்ள நிலையில் இந்தியாவில் ஒரு இலட்சத்து 51 ஆயிரத்து 954 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மெக்சிக்கோவில் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 917 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



## அவசரநிலை பிரகடனம்

(பீஜிங்)

கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றுப் பரவல் தீவிரமடைந்ததையடுத்து சீனாவின் ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் மிகவும் அத்தியாவசிய தேவை இருந்தால் மட்டுமே குடிமக்கள் வெளியே செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ள நிலையில் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–227

# காலத்தே பயிர் செய்;பயிர்ச் செய்கையிலும் உணவு முறையிலும் மாற்றம் தேவை!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இம்முறை மழைவீழ்ச்சி முன் எப்போதும் இல்லாதது போல அதிமாகவும் இன்னும் அதனது வீழ்ச்சி முறையற்றும் இருக்கின்றது.

காலபோகத்து மழைவீழ்ச்சிபோல இல்லாமல் அதிகரித்தும் காலந்தாழ்த்தி ஆனால் விளைந்த நெற் பயிர்களை அழித்தும் நாசம் செய்திருக்கின்றது. இந்நிலை தொடருமானால் 2021 ஆம் வருடத் தேவைக்கான நெல் உற்பத்தியில் விழுக்காடு ஏற்பட சாத்தியமாகின்றது.

இதனால் தொடர்ச்சியாக பயிர்ச் செய்கையில் மாற்றங்களை கொண்டு வந்து இழந்ததை மீட்டெடுத்துக் கொள்ள வேண்டும்.

வழக்கமான நெற் பயிர்ச் செய்கைக்கு பின்னர் அவரைப் பயிர்களான உழுந்து, பயறு என்பனவற்றை பயிரிடுவது வழமை. இதனை நெல்லுக்குப்பின்னரான அவரை பயிர்த்தொகுதி என அழைப்பர். கிடைக்கின்ற ஈரப்பதனை முறையாக பயன்படுத்தி அதன் மூலம் எந்தவிதமான செலவும் இல்லாமல் இன்னொரு பயிரினை அறுவடை செய்தலாகும். அதிலும் உழுந்து பயிரிடும் போது அதனது விளைச்சல் அதிகமாக கிடைக்கும் போது இலாபமும் அதிகரித்ததாக இருக்கும். தற்போது உழுந்து பயிரின் விலை கிலோ ஒன்றுக்கு 1400 ரூபா வரை விற்கப்படுகின்றது. அவரைப் பயிர்கள் எமக்கு புரதத்தை அதிகளவில் தரக்கூடியன. அதிலும் இவ்வாறான பயிர்கள் ஊட்டச்சத்தை நிவர்த்தி செய்யக்கூடிய வல்லமையுடையன.

காலபோகமும் சிறுபோகமும் தற்போது மாறத்தொடங்கிவிட்டன. பெருவாரியான மழைவீழ்ச்சியைப் பார்த்தபின் இது வரண்ட வலயமா? எனக்கூட பலர் கேட்கத்தொடங்கிவிட்டார்கள். அந்த அளவிற்கு மழைவீழ்ச்சி எதிர்பார்த்ததை விட அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் கிடைத்திருக்கின்றது. பல குளங்களின் வான் கதவுகள் அனைத்தும் திறந்து விடுமளவிற்கு மழை பெய்திருக்கின்றது. இந்த வளத்தை நாம் முழுமையாக வினைத்திறனாக இன்னும் பயன்படுத்தத் தவறி விடுகின்றோம். கிடைக்கின்ற நீர் தவறுதலாகவேனும் விரயமாக வெளிச்செல்லக்கூடாது. எமக்கு நீரின் அவசியம் மிக முக்கியமானதாகும். நீரினை முறையாக நாம் பயன்படுத்திக் கொண்டால் அதன் மூலம் பயிர்ச்செய்கையினை மேலும் விரிவாக்கிக் கொள்ளலாம். நெற் பயிருக்கு முக்கியமான உள்ளீடாக நீர் அமைகின்றது. அந்த வகையில் அதனை வினைத்திறனாக மாற்றிக் கொண்டால் கிடைத்த நீரை சேமித்து தொடர்ச்சியாக பயன்படுத்த வாய்ப்புக்கள் அதிகம்.

முன்னைய காலங்களில் கட்டப்பட்ட குளங்கள் நீர்த்தேங்கங்களைத் தவிர தற்போது எந்த வகையாக குளங்களும் கட்டப்படுவதில்லை. இதன்மூலம் நீரேந்து பரப்புக்களை மேலும் அதிகரிக்க முடியாமலிருக்கின்றது. மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட குளங்களைத் தவிர பின்பு எதுவும் புதிதாக கட்டப்படுவதில்லை. மாறாக அனைத்து நீரேந்து பரப்புகளும் இன்னும் விரிவாக்கப்பட்டு அவற்றிலிருந்து நீரைப் பெறுவதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 310




தற்போதைய கொரோனா பரவல் காலத்தில் தொடர்ச்சியாக உணவுற்பத்தியைச் செய்து அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்தல் அவசியமாகின்றது. நோய் கண்டவர்களுக்கு சத்தான உணவுப்பொருட்களை வழங்குவதும் அவசியமாகும்.

அந்த வகையில் பல்வேறுபட்ட உணவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் எமது விவசாயப் பெருமக்களுக்கு வந்திருக்கின்றது.

உணவுற்பத்தியை விரிவுபடுத்தி மக்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை வழங்குதல் மிக மிக அவசியமாகும். இந்த கைங்கரியத்திற்கு அரச அனுசரணையும் அவசியம் கிடைத்திடல் வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவோர் பயிர்களை தெரிந்து நடவு செய்தால் அதன் மூலம் தொடர்ந்து வரும் காலத்திற்கு மக்களுக்கு உணவூட்ட முடியும். அதிலும் கொரோனா பரவலடையும் காலத்தில் அந்தந்தப் பகுதியில் அவசியம் உணவுற்பத்தியில் ஈடுபட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அதன் மூலம் தமது பகுதி மக்களுக்கான உணவை உறுதி செய்து கொள்ள முடியும்.

கிராமங்கள் தோறும் உற்பத்தி செய்யக் கூடிய பயிர்களை உற்பத்தி செய்யலாம். எமக்கு அவசியம்தேவையான உணவை நாமே உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை விரைந்து அதிகரிக்க வேண்டும். இன்னும் அனைவரையும் இதில் ஈடுபடுத்தினால் உணவுற்பத்தியில் அதிக முன்னேற்றம் காணலாம்.

உணவுற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை பார்க்கின்ற வேளையில் உணவுப் பழக்கத்தையும் நாம் சிறிது சிறிதாக மாற்றிக் கொள்ளலாம். பாரம்பரிய உணவுகளையே விதம்விதமாக உண்ணலாம். எமது பிரதேசத்தில் வளர்ந்திருக்கின்ற பலவகையான உணவாக உட்கொள்ளக்கூடிய மூலிகைகளை பட்டியலிட்டு பார்த்தால் அவற்றின் பயன்பாட்டை நாம் அவற்றினை தேவையான அளவில் வளர்த்து பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே தான் வழக்கமான பயிர்ச் செய்கையிலிருந்து மாறி நாம் காலத்திற்கேற்ற பயிர்ச் செய்கைக்குள் உள்ளாக வேண்டும்.

நாம் அன்றாடம் உண்ணும் நாகரிகமான உணவுகளை தவிர்த்து பாரம்பரியமாக வாழ்ந்த மக்கள் உண்டு சுகதேகிகளாக உள்ளவர்களாக நீண்ட ஆயுளுடன் இருந்தமைக்கு இவையும் ஒரு காரணமாகும். அந்த வகையில் பலவகையான சத்துக்களை விலை குறைவாக இலகுவாக பெறக்கூடிய உணவுப்பொருட்களை கிடைக்கின்ற நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை செய்வதன் மூலம் எங்கும் பசுமையான ஒரு நிலைமை உருவாகவும் சாத்தியமுண்டு. உணவுப் பழக்கத்தில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் எமக்கு அவசியம் உற்பத்தி செய்ய வேண்டிய பயிர்களை நாம் மாற்றியமைத்துக் கொள்ளலாம். தற்போதைய சூழலில் இந்த மாற்றம் அவசியமானதாகும்.

அவரைப் பயிர்களை அவசியம் பயிரிடும் அதேநேரத்தில் ஏனைய பயிர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். இது விடயத்தில் அதிகம் பயன்படாத தாவரங்களையும் வளர்ப்பது நல்லது.

தற்போது பழப்புளியின் விலையும் எகிறத் தொடங்கிவிட்டது. புளி எமது பிரதேசத்தில் எந்த விதமான கவனிப்பும் இல்லாத காணிகளில் நடுகை செய்ய வாய்பபுக்கள் உண்டு.

புளி வீதியோரங்களில் நடுகை செய்வதற்கும் வசதியான தாவரமாகும். அதேவேளையில் பாதையில் பயணிப்போருக்கு எந்தவிதமான இடர்களையும் தராத சிறிய இலைகளுடைய தாவரமாகும். புளியின் பயன்பாடு எமது உணவுப்பழக்கத்தில் அதிகமாக இருப்பதாலும் அதனது விலை தற்போது எகிறியிருப்பதாலும் அதுபோன்று வளர்க்கக்கூடிய தாவரங்களையும் குறிப்பாக மூலிகைத் தாவரங்களையும் இனங்கண்டு வளர்ப்பதன் மூலம் வருமானமும் மேலும் நல்லதொரு பயிர்த்தொகுதியின் வளர்ச்சிக்கும் நாம் பங்களித்ததாக இருக்கும்.

காலத்தே பயிர்செய் என்பது போல தற்போதைய கொரோனா இடர்காலத்திற்கேற்ப பயிர்களை பயிர் செய்வதோடு மேலும் அதிகம் பயன்படுத்தாத தாவரங்களையும் இதில் சேர்த்துக் கொள்ள முடியும்.

எமது உணவுப் பழக்கம் கிடைக்கின்ற உணவோடு மட்டுப்படுத்த வேண்டியதனால் அதற்காக நாம் எம்மை அனைத்து வழிகளிலும் தயார்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

உணவுப்பழக்கத்தை மாற்றுகின்ற அதேவேளையில் எமது சூழ்நிலைமைகளுக்கேற்ப பயிர்ச்செய்கையிலும் மாற்றங்களைக் கொண்டு வந்து நலிந்து போயிருக்கும் விவசாயப்பெருமக்களுக்கும் உதவுவோமாக.

# சொகுசு பேருந்து சேவை ஆரம்பம்

(கொழும்பு)

சிறப்பு வசதிகளுடன் கூடிய நிலையில் நகர்ப்புற பாக்கன்ரை சொகுசு பேருந்துச் சேவகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் டிலான் மிலன்ரூ இதனைத் தெரிவித்துள்ளார்.

கொட்டாவ மாக்கும்பறையில் இருந்து ஆரம்பமாகும் இந்த பேருந்து சேவையை நாடளாவிய ரீதியில் செயற்படுத்த தாம் எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

காலை 6 மணிமுதல் மாலை 9 மணிவரை ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒருமுறை இந்த பேருந்து சேவையை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# அன்றாடப் பதிவுகள் குறைவடைந்தன

(கொழும்பு)

மோட்டார்வாகன திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அன்றாட பதிவுகளின் எண்ணிக்கை 1000 இல் இருந்து 200 ஆக குறைவடைந்துள்ளதாக மோட்டார் வாகன திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று ஏற்படுத்துவதற்கு முன்பு தினசரி சுமார் 1000 வாகனங்கள் பதிவு செய்யப்படுவதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜெனரல் சுமித் அழகக்கோன் தெரிவித்தார்.

எனினும் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு வாகனங்களை உடைமை மாற்றுவதற்கான வாகனப்பதிவுகள் ஒரு நாளில் 600 வரை உயர்வடைந்துள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

# உருமாறிய புதிய வைரஸ் கட்டுப்படுத்தலுக்கும் கொவிட்-19 தடுப்பூசி பயன்படுத்த முடியும்

## வைத்தியர் சுதத் சமரவீர



**(கொழும்பு)**

**கொவிட்-19 வைரஸ் கட்டுப்படுத்தலுக்காக இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ள தடுப்பூசியினை உருமாறியுள்ள புதிய வகை வைரஸ் கட்டுப்படுத்தலுக்கும் உபயோகிக்க முடியுமென கண்டறியப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

கடந்த செப்டெம்பர் மாதம் முதல் இங்கிலாந்தில் உருமாறிய புதிய வகை வைரஸ் இனங்காணப்பட்டது.

இதுவரையில் தயாரிக்கப்பட்டுள்ள கொவிட் தொற்றுக்கான தடுப்பூசியின் மூலம் உருமாறிய புதிய வகை வைரஸ் பரவலையும் கட்டுப்படுத்த முடியும்.

இந்த வைரஸ் மிகவும் வேகமாக பரவக் கூடியது. எமது நாட்டுக்கும் இது தொடர்பான எச்சரிக்கை காணப்படுவதால் இங்கிலாந்திலிருந்து வரும் விமானங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் அதற்குள் அங்கிருந்து சிலர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவ்வாறு இலங்கை வந்த கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் குழுவில் ஒருவருக்கு இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான குறித்த நபர் எமது நாட்டிலுள்ள எந்தவொரு பிரஜையுடனும் நேரடித் தொடர்புகளை பேணியிருக்கவில்லை.

எனவே இலங்கையில் அந்த வைரஸ் சமூகப் பரவலாகும் வாய்ப்புக்கள் இல்லை.

குறித்த நபருக்கு முறையான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதால் அவரூடாக ஏனையோருக்கு பரவும் வாய்ப்பு முற்றிலும் இல்லை என வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார். (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2207

பாபு




அனிதா




கயல்




பீற்றர்




வைஷாலி




மாறன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொரோனா கட்டுப்பாட்டிற்குள் வந்தபின் மாகாண சபைத்தேர்தல் நடைபெறும்

(கொழும்பு)

**கொவிட்-19 வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் மாகாண சபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என சமுர்த்தி, நுண்கடன் மற்றும் அரச தொழில் வழங்கல் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அத்தியாவசிய தேர்தலாக காணப்படுகிறது. மக்களின் அடிப்படை உரிமைகளை அரசாங்கம் பாதுகாக்கும்.

மாகாண சபை முறைமையை அரசாங்கம் இரத்துச் செய்ய முயற்சிப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டு தவறானதாகும். மாகாண சபை தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு கூட்டமைப்பினர் பொறுப்புக் கூற வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்திலும் கூட்டமைப்பினர் பங்காளிகளாக செயற்பட்டுள்ளார்கள்.

இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபை முறைமையை முழுமையாகச் செயற்படுத்த முடியாது. மாகாண சபை முறைமையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில விடயங்கள் நாட்டின் அரச கட்டமைப்புக்கு பொருத்தமற்றதாக உள்ளது.

முரண்பாடற்ற வகையிலான விடயங்கள் மாத்திரம் மாகாணசபை முறைமையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செயற்படுத்தினார்.

மாகாண சபை தேர்தலை நடத்தினால் அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் தோல்வியடையும் என்பதை நன்கு அறிந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது.

ஏனைய மாகாணங்களை காட்டிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு மாகாண சபை முறைமை அத்தியாவசியமானதொன்றாக காணப்பட்டது. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள்.

நாம் வழங்கிய தேர்தல் உரிமையினை நல்லாட்சி அரசாங்கம் பாதுகாக்கவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அடைந்த தோல்வியின் அச்சத்தினால் மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டது. இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் பிரதான எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஆதரவு வழங்கினார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் கூட்டமைப்பினர் துணை நின்றார்கள். மாகாண சபை முறைமையை அரசாங்கம் நீக்க முயற்சிப்பதாக கூட்டமைப்பினர் தற்போது குற்றஞ்சாட்டுவது தவறாகும்.

மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படாது கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் மத்தியில் மாகாண சபை தேர்தலை நடத்துவது சவால் மிக்கது. அத்துடன் கொவிட் தாக்கதினால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்துவதும் சவால் மிக்கது. ஆகவே, இச்சவால்களை மாகாண சபை தேர்தலை நடத்துவதில் தேர்தல் முறைமை, கொவிட்-19 தாக்கம் ஆகிய இரு பிரதான விடயங்கள் குறித்து தற்போது ஆராயப்படுகிறது. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தி மகாண சபை தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# திரைப்படத்துறையை ஊக்குவிக்க மீண்டும் வரி நிவாரணம்

(கொழும்பு)

உள்ளூர் திரைப்படத்துறையை ஊக்குவிக்கும் வகையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப் பகுதியில் வழங்கப்பட்டு பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தினால் இரத்துச் செய்யப்பட்ட வரி நிவாரணத்தை மீண்டும் பெற்றுக் கொடுப்பதற்கு தற்சமயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன ஆகியோரினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரைத்துறையை சேர்ந்த வல்லுநர்கள் கடந்த 8 ஆம் திகதி அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து முன்வைத்த கோரிக்கைக்கு அமைய நிதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ, உள்ளூர் திரைப்பட கலைஞர்களின் கூட்டணியின் தலைவர், பிரதமரின் ஊடக செயலாளர் ரொஹான் வெலிவிட ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

அதற்கமைய திரைப்பட தயாரிப்பு மற்றும் திரைப்பட காட்சிப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை இறக்குமதி செய்யும் போது இறைவரி சலுகை வழங்கப்படும். அத்துடன் ஒரு திரைப்படத்தின் தயாரிப்புக்காக செலவிடப்பட்ட பணத்திற்காக வரி விலக்கு மற்றும் திரைப்படத்தை திரையிடப்படுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்திற்கு வரி நிவாரணம் குறித்தும் இந்த விவாதத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த வரி நிவாரணம் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒப்புதலுக்கமைய செயற்படுத்தப்படும். அதற்கேற்ப உள்ளூர் திரைப்படத் துறையினர் மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்கள் உள்ளிட்ட துறையுடன் தொடர்புடைய அனைத்து வல்லுநர்களுக்கும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக கோரிக்கைகளை முன்வைப்பதன் மூலம் அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்படும் இந்த வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புகிட்டும். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மதிய தூக்கம்

என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கின்றார். மதியம் சாப்பிட்டு முடிந்ததும் அப்படியே சாய்ந்து விடுவார். கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு வருவார். அதன் பின்பு சுறுசுறுப்பாக வேலை செய்வார்.

பொதுவாக எல்லோருக்கும் மத்தியானம் சாப்பிட்ட பின்பு கொஞ்சம் கீழே சாய்ந்து தூங்கினால் போதும் என்று தோன்றும். இது இயற்கை தான். கொஞ்சம் தூங்கி எழுந்தால் அதன்பின்பு உடம்பும் கொஞ்சம் சுறுசுறுப்பாக இருக்கும்.

அறிவியல் ஆய்வுகள் என்ன சொல்கின்றது தெரியுமா? இரவுத் தூக்கத்தின் நடுப்பகுதியிலிருந்து 12 மணிநேரம் கழித்து உடம்பு அதிகமாக சோர்வடைகின்றது. உறக்கத்தைத் தேடுகிறது அந்த நேரம்.

ஒரு பதினைந்து நிமிடம் தூக்கம் கிடைத்ததென்றால் உடம்பு மறுபடியும் இலேசாக ஆகிவிடும். கடுமையான உழைப்புக்குத் தன்னை தயார்படுத்திக் கொள்ளும். நீண்ட தூக்கங்களை விட இது மாதிரி குட்டித் தூக்கங்களுக்கு மதிப்பு அதிகம். இதை நேப் என்று சொல்வது வழக்கம்.

நெப்போலியன் குதிரைச் சவாரியில் இருக்கின்ற பொழுதே தூங்குவது வழக்கம்–இல்லையா? அதனால் அந்தப் பெயர் வந்தது என்று சிலபேர் சொல்லுவார்கள்.

ஆனால் உண்மையான காரணம் அது இல்லை. Knappian என்பது ஒரு பழைய ஆங்கில வார்த்தை. அதிலேயிருந்து வந்தது தான் நேப்– என்று விபரம் தெரிந்தவர்கள் சொல்கின்றார்கள்.

மிகவும் பெரிய பொறுப்பிலே இருந்தவர்கள் எல்லாம் மத்தியானம் தூங்கி எழுந்து கொள்வது உண்டாம். வின்ஸ்டன் சேர்ச்சில் மதியம் மூன்று மணிக்குத் தூங்க ஆரம்பித்தால் ஆறுமணிக்குத் தான் விழிப்பாராம்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது ஜேர்மன்காரர்கள் லண்டனில் குண்டு போட்டார்கள். அப்பொழுது சில சமயம் இவருடைய தூக்கம் கலைந்திருக்கின்றது.

உயிரியல் வல்லுநர்கள் மிருகக்காட்சிச்சாலையில் உள்ள மனிதக் குரங்குகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கின்றார்கள். அதெல்லாம் மத்தியான நேரத்தில் தூங்குமாம். விடியற் காலையில் புத்துணர்ச்சியோடு இருக்குமாம். பரிணாமக் கொள்கையின்படி இது மனிதர்களுக்கும் அது தொடர்ந்து வந்திருக்கின்றது.

குட்டித் தூக்கத்திற்கு பின்பு சூடான பானங்கள் சாப்பிட்டால் விசாலப் பார்வை கிடைக்குமாம். கோப்பி டீ பழக்கம் இல்லாதவர்கள் எலுமிச்சை சாறு அருந்தலாமாம்.

தூங்கி எழுந்த உடனே இசையைக் கேட்கிறதோ... அல்லது புத்தகம் வாசிப்பதோ நல்லதில்லையாம். அது மேலும் தூக்கத்தை கிளறுமாம். சாப்பிட்டவுடன் அப்படியே படுத்து விடுவதை விட மூன்று குவளை தண்ணீர் குடித்துவிட்டுப் படுத்தால் நல்லதாம். செரிமானம் சுலபமாக இருக்குமாம்.

சியஸ்டர் என்று சொல்லப்படுகின்ற இந்த மதிய தூக்கம் இயற்கைக்கு புறம்பானது அல்ல. இது நல்லதற்குத் தான் என்று அது சம்பந்தமான நிபுணர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். மதியத் தூக்கம் மாதிரியே பயணத் தூக்கம் என்பது ஒன்று. பிரயாணம் செய்த பொழுது தூங்குவது. சிலபேர் பேருந்திலே உட்கார்ந்த உடனே தூங்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருத்தர் டாக்டரைத்தேடி வந்து கேட்டார்...

ஏன் டாக்டர்? பேருந்திலே உட்கார்ந்து போகும் போது தூங்குவது தவறா? என்று கேட்டார்.

அது ஒன்றும் தவறு இல்லையே என்றார் டாக்டர். அப்புறம் ஏன் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள்? என்றார் அவர்.

நீங்கள் என்ன வேலை பார்க்கின்றீர்கள்? என்றார் டாக்டர்.

பேருந்திலே சாரதி வேலை பார்க்கின்றேன் என்றார் அவர்.

# நாடுகளின் ஆட்புல எல்லைகளும் இலங்கையின் எல்லையோரக் கடல் எல்லை நிர்ணயமும்

12

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**ஒரு கடலோர நாட்டின் கண்டத்திட்டு சம்பந்தமான கேள்வி-பதில்கள்.**

**கேள்வி 1 :- ஒரு கடலோர நாட்டின் கண்டத்திட்டு என்றால் என்ன?**

பதில்:- இது ஒரு கடலோர நாட்டின் நிலப்பரப்பு எல்லையிலிருந்து கண்ட விளிம்பின் (continental margin) வெளிப்புற விளிம்பு வரை நீரின் அடியிலுள்ள திட்டு அக் கடலோர நாட்டின் அதிகார எல்லைக்குள் (**coastal state's jurisdiction**) வருகின்ற கண்டத் திட்டு எனப்படும். எவ்வாறாயினும், கண்ட எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதிகள் சர்வதேச கடற்பரப்பின் ஒரு பகுதியாகும்.

**கேள்வி 2 :- . இக் கண்டத் திட்டு பகுதியில் கடலோர நாடுகளுக்கு என்ன உரிமைகள் உள்ளன?**

பதில்:- கடலோர நாடுகள் தங்களது கண்டத்திட்டில் உயிர்வாழும் மற்றும் உயிரற்ற வளங்களை ஆராய்ந்து சுரண்டுவதற்கான / அனுபவிப்பதற்கான பிரத்தியேக உரிமையைக் கொண்டுள்ளன.

**கேள்வி 3 :- கடலோர நாடுகளுக்கு அவற்றின் கண்டத்திட்டில் என்ன கடமைகள் மற்றும் பொறுப்புகளைக் கொண்டுள்ளன?**

பதில்:- கடலோர நாடுகள் தங்கள் கண்டத்திட்டுப் பகுதியல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளன, மேலும் பிற நாடுகள் கண்டத் திட்டுப் பகுதியை சில நோக்கங்களுக்காகப் (அதாவது குழாய் மற்றும் கேபிள்களை இடுவது போன்றவை) பயன்படுத்த அனுமதிக்க வேண்டியது அந்நாடுகளின் கடமையாகும்.

**கேள்வி 4 :- கண்டத் திட்டின் அளவு (size) மற்றும் வெளி வரம்புகள் (outer limits) எவ்வாறு நிறுவப்பட்டுள்ளன?**

பதில்:- அனைத்து கடலோர நாடுகளிலும் ஒரு கண்டத் திட்டு உள்ளது, இது நாட்டின் தளக் கோட்டிலிருந்து 200 கடல் மைல்கள் கடலுக்குள் நீண்டுள்ளது (1 கடல் மைல் = 1.852 கி.மீ). எனவே பல நாடுகள் தங்கள் கண்டத் திட்டு பற்றி மேலதிக தரவுகளை சேகரிக்க தேவையில்லை அல்லது அவற்றின் கண்டத் திட்டின் வெளி வரம்பைக் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை.

இருப்பினும், 200 கடல் மைல்களுக்கு அப்பால் நீண்டு செல்லும் நீரடி நீடித்த புவியியல் மற்றும் கண்டத்திட்டுகளைக் கொண்ட நாடுகள் இவற்றை ஆவணப்படுத்த வேண்டும். இந்த தகவல் நியூயோர்க்கை தளமாகக் கொண்ட வரம்புகள் குறித்த ஒரு சர்வதேச ஆணையத்தில் (**the Commission on the Limits of the Continental Shelf - CLCS**) சமர்ப்பிக்கப்படுகின்றது. அத் தகவல்களுக்கான ஒப்புதலை கண்டத்திட்டு வரம்புகள் ஆணையத்திடமிருந்து பெறல் வேண்டும். அப்போதுதான் கடலோர நாடு அதன் கண்டத்திட்டின் வெளிப்புற வரம்புகள் (200 கடல் மைல்களுக்கு மேற்பட்ட) பற்றிய தீர்மானம் மற்றும் அதற்கு கட்டுப்படுதல் போன்றவற்றை நிறுவ முடியும்.

**கேள்வி 5 :- மேற்கூறிய பதில்கள் அனைத்திற்கும் விதிகளை எங்கே காணலாம்?**

பதில்:- கடல் சட்டம் குறித்த ஐ.நா. மாநாடு (1982) பெரும்பாலும் பெருங்கடல்களுக்கான அரசியலமைப்பு (**the constitution for the oceans**) என குறிப்பிடப்படுகிறது. இது 167 நாடுகளினால் (2016 ஆம் ஆண்டு வரையில்) ஏற்கப்பட்டுள்ளது. மாநாட்டின் மிக முக்கியமான கொள்கைகள் வழக்கமான சட்டமாகக் கருதப்படுகின்றன. இதனால் இதில் சேராத நாடுகளுக்கும் இவ் விதிகள் பொருந்தும். கண்டத்திட்டு தொடர்பாக நாடுகளின் உரிமைகள் மற்றும் கடமைகள் மாநாட்டின் விதிகளிலிருந்து பின்பற்றப்படுகின்றன.

**கேள்வி 6 :- கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்தின் (CLCS) நோக்கம் என்ன?**

பதில்:- கண்டத்தின் வெளி வரம்புகளை நிறுவுவது தொடர்பாக கடல் சட்டம் குறித்த ஐக்கிய நாடுகளின் மாநாட்டு தீர்மானங்களை செயற்படுத்த உதவுவதாகும். இது 1997 இல் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு கடலோர நாடும் சமர்ப்பித்த தரவுகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செல்லுபடியை மதிப்பிடும் 21 புவியியலாளர்கள் (**geo logists**), புவி இயற்பியலாளர்கள் (geophysicists) மற்றும் நீர்நிலை வல்லுநர்களால் (**hydro logists**) ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு கரையோர அரசு தனது பிராந்திய கடலின் அகலம் அளவிடப்படும் அடிப்படைகளிலிருந்து 200 கடல் மைல் தாண்டிய கண்டத்திட்டின் வெளிப்புற வரம்புகளை ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 200 மீற்றருக்கு அப்பால் நீட்டிக்கும். அந்த வரம்புகளை நிறுவுவது தொடர்பான விடயங்களில் ஆணைக்குழு கடலோர நாடுகளுக்கு பரிந்துரைகளை வழங்கும். அதன் பரிந்துரைகள் மற்றும் நடவடிக்கைகள் எதிர் அல்லது அருகிலுள்ள கடற்கரைகளைக் கொண்ட நாடுகளுக்கு இடையிலான எல்லைகளை வரையறுப்பது தொடர்பான விடயங்களில் எவ்வித பாரபட்சமும் காட்டாது.

**கேள்வி 7 :- நீட்டப்பட்ட கண்டத்திட்டுகளின் அளவிற்கு மேல் வரம்பு உள்ளதா?**

பதில்:- ஆம். கண்டத்திட்டின் அளவை தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் விதியைப் பொருட்படுத்தாமல், முழுமையான வரம்புகள் தீர்மானிக்கப்படும். கண்டத்திட்டில் 350 கடல் மைல் (648 கி.மீ) தாண்டி அல்லது, மாற்றாக, 100 கடல் மைல் (185 கி.மீ) இற்கும் மேலாக கடற்பரப்பு 2 500 மீற்றர் ஆழத்தில் அமைந்திருக்கும் இடத்திற்கு அப்பால் நீட்டிக்கப்படக்கூடாது. கடலோர நாடுகள் இந்த விதிகளில் எதைப் பயன்படுத்த விரும்புகின்றன என்பதைத் தேர்வு செய்யலாம் என்பதால், சில சந்தர்ப்பங்களில் கண்டத்திட்டுக்கள் 350 கடல் மைல்களுக்கு அப்பால் கணிசமாக நீட்டிக்கப்படலாம்.

**கேள்வி 7 :- இந்த வரம்புகளுக்குள் கண்டத்திட்டின் அளவு எவ்வாறு நிறுவப்பட்டுள்ளது?**

பதில்:- இரண்டு முறைகள் உள்ளன. இவை இரண்டும் கடற்பரப்பின் நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டவை (அதாவது பௌதீக அம்சங்கள்). ஒன்று கண்டத்திட்டின் சாய்வின் அடிப்பகுதியில் இருந்து 60 கடல் மைல் தொலைவில் ஒரு வெளிப்புற எல்லையை வரைகிறது. மற்றொன்று அடையல்களின் தடிப்பு (அதாவது வண்டல் தடிப்பு) அடிப்படையில் அமைந்துள்ளது. கடலோர நாடுகள் இதில் எந்த கணக்கீட்டு முறை அவர்களுக்கு மிகப்பெரிய கண்டத்திட்டைக் கொடுக்குமோ அதைத் தேர்வு செய்யலாம்.

**கேள்வி 8 :- கண்டத்திட்டுக்கும் 200 மைல் பொருளாதார தனியுரிமை வலயத்திற்கும் என்ன தொடர்பு?**

பதில்:- கரையோர நாடுகள் தங்கள் கரையிலிருந்து 200 கடல் மைல் நீளமுள்ள பொருளாதார தனியுரிமை வலயங்களை நிறுவுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளன. மேலும் இந்த நாடுகள் தானாகவே கண்டத்திட்டுகளையும் (200 கடல் மைல்) ஒரே தூரத்தை நீட்டிப்பதால், பொருளாதார தனியுரிமை வலயம் மற்றும் கண்டத் திட்டுக்கள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று மேல் பொருந்தும். இருப்பினும் நோர்வே உட்பட பல கடலோர நாடுகள் தங்கள் பொருளாதார தனியுரிமை வலயத்திற்கு அப்பால் நீட்டிக்கும் கண்டத்திட்டுக்களைக் கொண்டுள்ளன. அதன் 200 மைல் பொருளாதார தனியுரிமை வலயத்தில், கடலோர நாடு நீர் நெடுவரிசையில் உள்ள வளங்களுக்கு இறையாண்மை உரிமைகளைக் கொண்டுள்ளது. அதேநேரத்தில் அதன் கண்டத்திட்டில் அது கடற்பரப்பிலும் அதன் மண்ணிலும் உள்ள வளங்களுக்கு இறையாண்மை உரிமைகளைக் கொண்டுள்ளது.

**கேள்வி 9 :- கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையம் நாடுகளுக்கிடையேயான எல்லை நிர்ணயங்களைக் கையாளுகிறதா?**

பதில்:- இல்லை. கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையத்தின் நடைமுறை விதிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையில் கண்டத்திட்டை வரையறுப்பது தொடர்பான விடயங்களை பாதிக்கவோ அல்லது பாரபட்சம் காட்டவோ அனுமதிக்காது. கண்டத்திட்டு வரம்புகள் குறித்த ஆணையம் கண்டத்திட்டின் வெளிப்புற வரம்புகளுடன் மட்டுமே செயற்படுகிறது, இருதரப்பு எல்லைகள் அல்ல.

**தென் வங்காள விரிகுடாவில் நாடுகளின் கண்டத்து புற எல்லைகளை (200 கடல் மைல்களுக்கு அப்பால் நீண்டு செல்லும் கண்டத்திட்டின் எல்லைகளை) நிறுவுதல்.**

ஐக்கிய நாடுகளின் கடல் சட்டம் பற்றிய 3 ஆவது மகாநாட்டில் வங்காள விரிகுடாவில் தெற்குப் பகுதியின் கடற்படுக்கையின் தனித்துவமான புவி வெளியுருவியல் அம்சங்கள் காரணமாக உடன்படிக்கையின் உறுப்புரை 78ன் பிரயோகத்தில் விதிவிலக்கொன்று இருப்பதாக முன்மொழியப்பட்டது. மகாநாடு இதனை "கண்டத்து புற எல்லையை நிறுவுவதற்கு ஒரு விசேட முறையை பின்பற்றுதல்" என்னும் கூற்றைச் சேர்க்கத் தீர்மானித்தது. வங்களா விரிகுடாவில் கங்கை நதியின் நீரில் மூழ்கியுள்ள கழிமுகம் இருக்கும் இடத்திலுள்ள அடையல்களின் தடிப்பு 20 km இற்கு அதிகமாக வடக்கிலிருந்தும் நடுவில் 8 km ஆகவும் பின்பு 3 km ஆகவும் குறைந்து குடாவின் தெற்குப்பகுதியில் 1 km ஆக குறைந்தும் செல்கின்றது என நம்பப்படுகின்றது. நீரில் மூழ்கிய இக் கழிமுகத்தில் கண்டத்திட்டின் முறிவு கடற்கரைக்கு அருகில் காணப்படுவதாகவும் கண்டத்து அடையல்களின் இயற்கையான நீட்சியைக் காட்டும் விசிறி இலங்கைக்கு அப்பால் பல நூறு கிலோ மீற்றர் வரை பரந்துள்ளது எனவும் 1976 இல் சில நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(தொடரும்...)

# ஜனாதிபதி தலைமையில் அமைதிக்கான ஆசிய பௌத்த சம்மேளனம்

(கொழும்பு)


அமைதிக்கான ஆசிய பௌத்த சம்மேளனம் 13 ஆவது நிறைவேற்று சபை கலந்துரையாடல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஸ்ரீ சம்போதி விஹாரையில் இடம்பெற்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் ஒற்றுமையினை இலக்காகக் கொண்டு ரஷ்யா மற்றும் மொங்கோலிய நாட்டு பௌத்த தலைவர்கள் அனைத்து நாடுகளினதும் பௌத்த அமைப்புக்களின் தேவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன் பிரதிபலனாக 1970 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் திகதி மொங்கோலியாவின் ஹூலன்பட்டார் நகரத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரையில் ஒன்றுகூடிய பௌத்த தலைவர்கள் ஆசியாவின் அமைத்திக்கான சம்மேளனத்தின் முதல் கலந்துரையாடலை நடத்தினர். இரண்டாவது கலந்துரையாடல் இலங்கையில் இடம்பெற்றுள்ளது. இன்றுவரையில் உலகளாவிய ரீதியில் உள்ள பௌத்த நாடுகள் இவ்வமைப்பில் உறுப்புரிமையினை பெற்றுக்கொண்டுள்ளன. (நி-4)

# ஆலய வழிபாடு

## ஏன் - எதற்கு - எப்படி



## வாழ்வை வளமாக்கும் வாகனம்

ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒரு வாகனம் உண்டு. சிவனுக்கு நந்தி, திருமாலுக்கு கருடன், அம்மனுக்கு சிம்மம், விநாயகருக்கு மூஷிகம், முருகனுக்கு மயில், சாஸ்தாவுக்கு யானை என்று தெய்வங்களுக்குரிய வாகனங்களை சொல்லிக் கொண்டே போகலாம். அதிதேவதைகள் நவக்கிரகங்களுக்கு கூட தனித்தனியே வாகனங்கள் உள்ளன.

ஆலயங்கள் நமது உடல் அமைப்பு தத்துவப்படி அமைந்துள்ளதை மூன்றாவது கட்டுரையில் படித்திருப்பீர்கள். அதன்படி பார்த்தால் ஒவ்வொரு சந்நிதியிலும் உள்ள வாகனம் என்பது வாய்க்குள் இருக்கும் நாக்கைக் குறிக்கும்.

நாக்கின் துணை இல்லாமல் நாம் எதுவுமே சாப்பிட முடியாது. அதுபோல வாகனம் துணையில்லாமல் இறைவனை நெருங்க முடியாது.

இறைவனை வணங்கும் முன்பு இந்த வாகனங்களின் அனுமதியையும் அருளையும் பெற வேண்டும். அதன் பிறகே சந்நிதிக்குள் சென்று வழிபாடு செய்ய வேண்டும். அதன் பிறகே சந்நிதிக்குள் சென்று வழிபாடு செய்ய வேண்டும் என்பது ஐதீகமாகும்.

இத்தகைய சிறப்புப் பெற்ற வாகனங்கள், ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய வாகனமாக மாறியதற்கு பின்னணியில் ஒரு வரலாறு உண்டு.

தேவேந்திரன் சபையில் இருந்த வாமதேவருக்கும் கிரௌஞ்சகன் என்பவனுக்கும் ஒரு தடவை மோதல் ஏற்பட்டது. ஆத்திரம் அடைந்த வாமதேவர், கிரௌஞ்சகனை எலியாக போகும் படி சபித்தார். கிரௌஞ்சகன் அதன் பிறகும் திருந்தாமல் எலி உருவத்திலேயே முனிவர்களை துன்புறுத்தினான். இதுபற்றி பராசர முனிவர் விநாயகரிடம் முறையிட்டார்.

உடனே விநாயகர் எலி உருவில் இருந்த கிரௌஞ்சகனின் ஆணவத்தையும் அட்டகாசத்தையும் அடக்கினார். இதனால் மனம் திருந்திய கிரௌஞ்சகன், மீண்டும் கந்தர்வ உருவம் எடுப்பதற்காக, விநாயகர் தன் மீது ஏறி பயணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். விநாயகருக்கு கிரௌஞ்சகன் மீது ஏறி அமர அவன் சாபம் நீங்கியது.

அன்று முதல் எலி விநாயகரின் வாகனம் ஆனது. இதை உணர்த்தவே விநாயகருக்கு மூஷிக வாகனர் என்ற பெயரும் உண்டு.

அதுபோல முருகப்பெருமானை மயில் வாகனன் என்றழைக்கின்றோம். திருச்செந்தூரில் மரமாகி நின்ற சூரனை முருகப்பெருமான் வேல் வீசி இரண்டாக பிளக்கச் செய்து சம்ஹாரம் செய்தார்.

அப்போது அந்த மரத்தின் ஒர பகுதி மயிலாக மாறி முருகப்பெருமானுக்கு வாகனமாக மாறியது என்பது வரலாறாகும். மயில் தோகை விரித்தாடும் காட்சி ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் வடிவமாக இருப்பதாக கந்தரலங்காரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலிப்பால் கொண்டு வரச் சென்ற ஐயப்பனுக்கு அந்த புலியே வாகனம் ஆனது. புலியில் ஏறி ஐயப்பன் அரசவைக்குத் திரும்பினார். இப்படி ஒவ்வொரு வாகனத்துக்கும் ஒரு வரலாறு உள்ளது.

சிவனுக்குக் காளையும் பெருமாளுக்கு கருடனும் வாகனம் ஆன வரலாறு உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஊழிக் காலத்தில் உலகம் அழிந்தாலும் தர்ம தேவதை தான் அழியாதிருக்கும் பொருட்டு நந்தி வடிவத்தில் அமைந்தது. இந்த நந்தி சமம், விசாரம், சந்தோஷம், சாது, சங்கமம் ஆகிய நான்கையும் 4 கால்களாக கொண்டது. ஆன்மாக்கள் பரிசுத்தம் பெற்றால் சிவபெருமான் அருளைப் பெறலாம் என்பது தத்துவமாகும்.

இதனால் தான் நந்தி ஈசனின் வாகனமானது. அதுபோல பெரிய திருவடி என்றழைக்கப்படும் கருடன் தன் மீது மகா விஷ்ணு எழுந்தருள வேண்டும் என்று தவம் இருந்து அந்தப் பாக்கியத்தைப் பெற்றார்.

இதனால் தான் கருடன் விஷ்ணுவின் வாகனம் ஆனது. கருடாழ்வாரின் தோள்களில் அமர்ந்து வரும் விஷ்ணுவைப் பார்த்து வழிபட்டால் வாழ்வில் வளம் உண்டாகும் என்பது ஐதீகமாகும்.

ஆலயங்களில் பிரமோற்சவம் மற்றும் விழா நாட்களில் இந்த வாகனங்களில் தான் உற்சவர் வீதி உலா வருவார். அதாவது பக்குவம் இல்லாத ஆன்மாக்கள் எளிதில் பக்குவம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் வீதி உலா வருகின்றார் என்பார்கள். இந்த திருவீதி உலாவின் போது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை இறைவன் மனிதர்களுக்கு உணர்த்துகிறார் என்றும் சொல்வார்கள்.

பிரமோற்சவம் விழா நடக்கும் 10 நாட்களும் ஒவ்வொரு வாகனத்தில் அமர்ந்து உற்சவர் வீதி உலா வருவார். இப்படி விதவிதமான வாகனங்களில் இறைவன் வீதி உலா வருவதற்கு ஒரு தத்துவம் உள்ளது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மோட்டார் சைக்கிள் பந்தயம் பங்கெடுத்த 12 பேர் கைது

(பிலியந்தலை)

மோட்டார் போக்குவரத்து சட்டத்தை மீறி பிலியந்தலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பந்தயத்தில் பங்கெடுத்தமைக்காக 12 மோட்டார் சைக்கிள் சாரதிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பிலியந்தலை பகுதியில் சட்டவிரோத மோட்டார் பந்தயம் முன்னெடுக்கப்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் மேற்கொண்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்களுக்கு சொந்தமான 12 மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுபோன்ற சட்டவிரோத மோட்டார் பந்தயங்களைத் தடுக்க கடந்த சில வாரங்களாக, குறிப்பாக விடுமுறை நாட்கள் மற்றும் மாலை வேளைகளில் சிறப்பு சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-4)

## துரித அன்டிஜன் பரிசோதனையில் மேலும் எழுவருக்கு தொற்று

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் இருந்து வேறு மாகாணங்களுக்கு வெளியேறும் நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் மேலும் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் இருந்து வேறு மாகாணங்களுக்கு வெளியேறுவதற்கு முற்பட்ட 326 பேரிடம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேவேளை குறித்த தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை அடையாளம் காணும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (நி-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மார்ச் மாதம் விசாரணைக்கு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர் நீதிமன்றின் எழுவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது. (நி-4)

## மஹர சிறைச்சாலைக் கலவரம் சுமார் 6 கோடி சொத்துகளும் சேதம்

(கொழும்பு)

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக 6 கோடிக்கும் அதிக பெறுமதி கொண்ட சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அதற்காக நியமிக்கப்பட்ட மதிப்பீட்டு சபையால் மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தால் ஏற்பட்ட சொத்து சேதம் உள்ளிட்ட இழப்புக்கள் உத்தியோகபூர்மாக அறிவிக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த சம்பவத்தின் போது அரச சொத்துக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் அமைதியற்ற வகையில் செயற்பட்ட 120 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தின் போது சில கட்டடங்கள், ஔடத களஞ்சியசாலை மற்றும் ஆவண அறை உள்ளிட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பேருந்தில் இருந்து போதைப்பொருள் மீட்பு


(கொழும்பு)

கொஸ்கொட பகுதியில் சொகுசு பேருந்தொன்றிலிருந்து 18 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் நேற்றுக் காலை கைப்பற்றியுள்ளனர். இதன்போது சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## சிங்கமும் சிலையும்



ஒரு நாள் ராமு தன்னுடைய சிங்கத்தை அழைத்துக்கொண்டு காட்டுப்பகுதிக்கு தேன் எடுப்பதற்காக சென்று கொண்டிருந்தான்.

செல்லும் வழியில் தங்களில் யார் அதிக வீரமுள்ளவர்கள் என்பதைப் பற்றி சிங்கமும் ராமுவும் பேசிக்கொண்டு சென்றனர்.

அப்போது செல்லும் வழியில், "ஒரு மனிதன் சிங்கத்தைக் கீழே தள்ளி அதன் மீது நிற்பதைப் போல" ஒரு சிலை இருந்தது.

""அதைப் பார்த்தாயா? யாருக்கு அதிக வீரம் இருக்கிறது என்பது இதிலே தெரிகிறது" என்றான் ராமு.

""ஓ, அது மனிதன் செய்த சிலை. ஒரு சிங்கம் அந்த சிலை செய்திருந்தால், மனிதனைக் கீழே தள்ளி அவன் மீது, தான் நிற்பது போலச் செய்திருக்கும்" என்று சொல்லியது சிங்கம்.

நீதி:
தனக்கென்றால் தனி வழக்குதான்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## இதயம் கவர்ந்த இஸ்ஸஸ் யுத்தம்




நிலை குலைந்து போனது டேரியஸின் படை. மூச்சுவிடக்கூட அவகாசமில்லை. தொடர் தாக்குதல்கள் டேரியஸின் வீரர்கள் மண்ணில் சாய்ந்து கொண்டேயிருந்தார்கள்.

பாரசீக வீரர்கள் தன் கண் முன்னாலேயே மடிவதைப் பார்த்த டேரியஸுக்கு சர்வநாடியும் அடங்கி விட்டது. மீண்டும் உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலை.

என்ன செய்வது? பழக்கப்பட்ட காரியம் ஒன்று இருக்கிறது. அதைத்தான் செய்தாக வேண்டும். வேறு வழியில்லை.

கொஞ்சம் தாமதித்தாலும் உயிரை விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும். அடுத்த நிமிடம் தப்பிக்கும் நடவடிக்கையில் இறங்கினார் டேரியஸ்.

என்னது? டேரியஸ் மீண்டும் தப்பிவிட்டாரா? தப்பிக்க விடவே கூடாது. பிடியுங்கள் அவரை. ஆத்திரம் பொங்கச் சீறினார் அலெக்சாண்டர்.

குதிரை வீரர்கள் சிலர் டேரியஸ் சென்ற பாதையில் மின்னல் வேகத்தில் பறக்கத் தொடங்கினார்கள். எவ்வளவோ தேடியும் டேரியஸ் கண்களுக்குச் சிக்கவில்லை.

யுத்தம் செய்வதைக் காட்டிலும் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதில் தேர்ந்தவனாக இருக்கிறான் டேரியஸ். எகத்தாளமாகச் சொன்னார் அலெக்சாண்டர்.

வீரர்கள் எல்லோரும் சிரித்து மகிழ்ந்தனர். உற்சாகமாக ஓய்வெடுக்கச் சென்றார் அலெக்சாண்டர்.

அறையை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தார் மருத்துவர் பிலிப். மன்னரைச் சந்திக்க வேண்டும். அனுமதி கிடைத்தது. வாருங்கள் பிலிப். எப்படி இருக்கிறீர்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு?

அரசே உங்களுடைய தொடைப்பகுதியில் வாளால் ஏற்பட்ட காயம் ஒன்றைக் கவனித்தேன். அதை உடனடியாகச் சரி செய்ய வேண்டும்.

ஹா... ஹா... ஹா... அரசே ஏன் சிரிக்கிறீர்கள்? தவறாக எதுவும் சொல்லிவிட்டேனா? இல்லை பிலிப். எனக்கு ஒரேயொரு காயம் தான்.

நம்முடைய வீரர்களோ ஏராளமான காயங்களுடன் இருக்கிறார்கள். அவர்களை முதலில் கவனிப்போம். இறுதியாக என்னைக் கவனிக்கலாம்.

வீரர்கள் தங்கியிருந்த கூடாரத்துக்குள் போனார்கள் அவர்கள். உடன் மற்ற மருத்து வர்களும் இவர்களைப் பார்த்ததும் எல்லோரும் எழுந்து நின்றனர். (தொடரும்)

இந்த உலகில் எதுவுமே விடாமுயற்சியை எதிர்த்து நிற்க முடியாது. மிகப் பெரிய சாதனைகளும் அயராமல் செய்யப்பட்ட சிறு முயற்சிகள் பலவற்றின் திரண்ட தொகுதிதான்! – ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு உலக ஆதரவைப் பெற்றால் உண்டு தீர்வு

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது ஒற்றுமையின் அவசியத்தை எடுத்தியம்புகின்ற தமிழ் வரிகள்.

இதனை மேலும் வலியுறுத்த முற்பட்ட நம் முன்னோர்கள்; அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்றனர்.

அடம்பன் கொடி என்பது மிக மெல்லியது. இருந்தும் அந்த மெல்லிய கொடிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து திரண்டு விட்டால், அந்தக் கொடிகளை அறுக்க முடியாமல் போய்விடுகிறது.

ஆக, நாம் சிறுபான்மை இனம் என்றிராமல் ஒற்றுமைப்பட்டு ஒன்றுசேர்ந்தால், எங்கள் பலத்தை எவராலும் எதுவும் செய்ய முடியாது.

எனினும் நீண்ட நெடுங்காலமாக தமிழ்த் தரப்புகள் ஒன்றுசேர்வது முடியாத காரியமாயிற்று.

தமிழ்த் தரப்புகளை ஒற்றுமைப்படுத்துகின்ற முயற்சிகளில் பலர் பலகாலம் ஈடுபட்டிருந்தபோதிலும் தற்போது, தமிழ்த் தரப்புகள் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் ஒன்றுபடுவதென எடுத்த முடிவு வரவேற்கப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு ஒற்றுமையை எம் தமிழ் மக்களே ஏற்படுத்தினர்.

கடந்த பொதுத் தேர்தலில் அளித்த வாக்குகள் எவரையும் ஓரங்கட்ட முடியாது என்ற படிப்பினையைப் போதித்திருந்தது.

இஃது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி ஆகிய தமிழ்க் கட்சிகளை தமிழர் சார்விடயங்களில் ஒற்றுமைப்படுத்தியுள்ளது.

ஆம், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரைக் கையாள்வதில் ஒரு பொது உடன்பாட்டுக்கு மேற்படி அரசியல் கட்சிகள் இணங்கியிருப்பது மிகப்பெரிய விடயம்.

ஆம், இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பின்போது தமிழ்த் தரப்புகள் ஒன்றுபட்டால் மட்டுமே இந்தியா, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்பதைக் கூறியிருந்தார்.

அவர் கூறிய ஒற்றுமை இப்போது நிஜமாகியிருக்கிறது.

எனவே ஜெனிவாக் கூட்டத் தொடரைக் கையாள்வதற்காக, உடன்பாட்டுக்கு இணங்கிய பாராளுமன்ற உறுப்பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மேற்போந்த இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு; தமிழ் மக்களுக்காக உலக நாடுகளின் ஆதரவை பெற்றுக் கொள்கின்ற முயற்சிகளில் கூட்டாக இறங்க வேண்டும்.

இந்த முயற்சியை இந்தியாவில் இருந்து ஆரம்பித்து அமெரிக்கா, பிரிட்டன், கனடா போன்ற நாடுகள் ஈறாக அவற்றின் ஆதரவைப் பெறுகின்ற முயற்சியில் ஒன்றுபட்டு இறங்கினால், தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியமாகும் என்பது சத்தியம்.

## பொதுமக்களின் அலட்சியப் போக்கே தொற்று பரவ காரணம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்ற தவறியதன் காரணத்தினாலேயே தொற்று ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் நகரப்பகுதி மற்றும் கடைத்தொகுதிகளில் எழுந்தமானமாக பி.சி.ஆர்.பரிசோதனைகள்தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்ற தவறியதன் காரணத்தினால் தொற்று ஏற்பட்டுள்ளதை எம்மால் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

எனவே பொது மக்கள் அடிப்படையான சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் ஊடாக தொற்றில் இருந்து இலகுவாக தப்பிக் கொள்ள முடியும்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் அடையாளம் காணப்பட்ட இரண்டு தொற்றாளர்களும் மிகவும் அபாயமான நிலையிலேயே வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக அதிகளவான. நோயாளர்கள் அபாயமான நிலைமையில் வரும்போது இவர்களின் உயிர்களை காப்பாற்றுவதற்காக எமது உத்தியோகத்தர்கள் கடுமையாக பாடுபட வேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் உயிர் இழப்புக்களையும் மக்கள் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே மக்கள் அடிப்படையான சுகாதார நடைமுறைகளை கட்டாயமாக நீங்கள் சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்கின்றபோது கடைபிடிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-285)

## அரச உத்தியோகத்தர் மீது பரந்தன் பகுதியில் தாக்குதல்

(பரந்தன்)

கிளிநொச்சி பரந்தன் பகுதியில் வைத்து மது போதையில் வந்த கும்பலினால் அரச உத்தியோகத்தர் ஒருவர், தாக்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த குறித்த அரச உத்தியோகத்தர் மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் புத்தூர் கிழக்கு அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மாதாந்த சதுர்த்தி பூஜையை முன்னிட்டு நடந்தப்படும்சொற்பொழிவு இன்று 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில்ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இதில் திருவருள் வாசகர் சைவப்புலவர் கா. கமலநாதன் "ஆலயத் தொழுவது சாலவும்நன்று" என்னும் பொருளில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றுவார். (5-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கலைப்பீடம். பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், பலாலி வீதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக **Graduate Studies,** நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், **Bright Inn, AVN OR** பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, **IBC** தமிழ், **BC CAS,** யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம், பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கை - சிவதாஸ் கட்டடத்தொகுதி, கெருடாவில், மட்டுவில், கல்வயல், நுணாவில் சந்தி, பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்தி வரை, திருநெல்வேலி சந்தை, பனிக்கர் லேன் திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவில் பிரதேசம், திருநெல்வேலி கொமர்ஷல்வங்கிஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** புதியசின்னக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## புன்னகையோடு திகழுங்கள்

❖ மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள். பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.

❖ உடல் மற்றும் மனதிலுள்ள குறைகளை நினைத்து துயரப்படுவதால் நமக்கு பயன் எதுவும் கிடைக்காது. அவற்றை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஊக்கத்தோடு இருப்பதே நன்மை தரும்.

❖ எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை. இந்த இரண்டையும் படைக்கலனாகக் கொள்பவர்கள் எந்த தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவர்.

❖ மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.

❖ இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

❖ வாழ்வில் ஒருவன் விருப்பங்களையும், கோபத்தையும் அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரத்தையும், இன்பத்தையும் அவனால் உணர முடியும்.

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை

### நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது

### ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்



மகர இராசி வாசகர்களே!

ஏழரைச்சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கத்தோடு இந்தப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. ஒரு வழியில் பார்த்தால் உங்கள் இராசிநாதன் சனி, உங்கள் இராசியிலேயே பலம் பெற்று இருக்கிறது என்றும் சொல்லலாம். அதுமட்டுமல்ல, அவரோடு சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான வியாழனும் இணைந்திருக்கின்றார். இந்தப் புத்தாண்டில் மறக்க முடியாத சம்பவங்கள் நிறைய நடைபெறப்போகின்றது. உங்களுக்கு முதல் சுற்றாகவோ, மூன்றாவது சுற்றாகவோ, ஏழரைச் சனி நடைபெற்றால் அதில் கவனம் தேவை. இரண்டாவது சுற்றாக விளங்கும் பொங்கு சனி காலமாக இருந்தால் தொழில் முன்னேற்றம், உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பு, கடன் சுமை குறையும் வாய்ப்பு ஏற்படும்.

ஆண்டு தொடங்கும் பொழுதே குருச் சந்திர யோகமும் நீச்ச பங்க இராஜயோகமும் ஏற்படுகின்றது. மேலும் குரு நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப இல்லத்தில் சலசலப்பான நிலை மாறி, கலகலப்பான நிலை உருவாகும். சுபச்செய்திகள் வந்து சேரும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து மேம்பாடு அடைய வைப்பர். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பது யோகம்தான். அவரோடு குரு பகவானும் சஞ்சரிக்கின்றார். எனவே ஜென்ம குரு, ஜென்மச்சனி என்றும் எல்லோரும் சொல்வார்கள். இன்னும் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்க காலம் இருக்கின்றது. உங்களைப் பொறுத்தவரை சனி பகவான் நன்மை செய்யும் கிரகமாகவே விளங்குபவர். இருப்பினும் 'ஆயுள்காரகன்' என்றும் அவர் அழைக்கப்படுவதால், சிறுசிறு அச்சுறுத்தல்களை ஆரம்பத்தில் கொடுப்பார். குரு போன்ற சுபகிரகங்களின் பார்வை பதியும் பொழுது, உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும்.

அஷ்டமாதிபதி சூரியன் 12 இல் மறைந்திருப்பது யோகம்தான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கு ஏற்ப உத்தியோகத்தில் நல்ல மாற்றங்களும் திருப்தி தரும் விதத்தில் ஊதியமும் கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். வாகன மாற்றங்கள் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். இலாப ஸ்தானத்தில் சுக்கிரன், கேதுவோடு இணைந்திருக்கிறார். எனவே, வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வந்து சேரும். செவ்வாய் பலம் நான்கில் இருப்பதால் இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக ஜென்மச் சனியின் ஆதிக்கத்தில் வீண் விரயங்கள் ஏற்படாமல் இருக்க இடம் வாங்குவது, வீடு கட்டுவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் கவனம் செலுத்தலாம். ராகு 5 இல் சஞ்சரிப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். சர்ப்பக் கிரகங்களுக்கு மத்தியில் உங்களுக்கு இராசி இருப்பதால் ராகு-கேதுக்களுக்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**மகர குருவின் சஞ்சாரம்**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே குரு பகவான் சஞ்சரித்து நீச்சம் பெறுகின்றார். அவர் 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் வலிமை இழக்கும் பொழுது மாற்றங்களும் ஏற்றங்களும் வந்து கொண்டே இருக்கும். சகோதரர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்களா? என்பது சந்தேகம் தான். வழக்குகள் எதிர்பாராத விதத்தில் வரலாம், உடன் பிறப்புகள் சொத்து சம்பந்தமான வழக்குகள் போட்டாலும் அது இழுபறி நிலையில்தான் இருக்கும். எதையும் யோசித்துச் செயற்படுங்கள்.

12 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் பயணங்கள் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும். விரயங்களைச் சமாளிக்கும் திறமை உங்களுக்கு உண்டு என்றாலும் வீண் விரயங்களால் மனக் கலக்கமும் உருவாகும். குடும்ப இரகசியங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். கொடுக்கல் - வாங்கல்களில் பாக்கிகள் வசூலாகாமல் போகலாம். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் வருவதில்




தாமதம் ஏற்படும். சொத்து விற்பனை முடிவடைந்தாலும் பணம் கைக்கு கிடைப்பது அரிது. பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு கொடுத்த பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைத்தால், அது முடிவடையாமல் இருப்பது மட்டுமல்ல, உங்கள் மீது வீண் பழிகளும் வந்துவிடும். வாகனப் பழுதுகளால் வாட்டங்களும் அதனால் விரயங்களும் உண்டு.

**குருவின் பார்வை பலன்கள்**

புத்தாண்டில் மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே, அந்த இடங்கள் புனிதமடைந்து உங்களுக்கு நன்மை தரும் விதத்தில் பலன்கள் கிடைக்கும். குறிப்பாக உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தைப் பார்ப்பதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே தெய்வ பலமும் தன்னம்பிக்கையும் உங்களுக்கு திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்தி தரும். உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பர். கல்யாண-வாய்ப்புகள் கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். இதுவரை விலகி இருந்த தந்தை வழி உறவினர்கள், உங்களோடு வந்திணைய வாய்ப்பு உண்டு. வீடு வாங்க வேண்டும், இடம் வாங்க வேண்டுமென்று எண்ணியிருந்தால் அந்த எண்ணங்கள் இந்த ஆண்டு நிறைவேறும். ஏழரைச் சனி நடைபெறுவதால் வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு தாமதங்கள் ஏற்படும்.

கும்ப குருவின் சஞ்சார காலத்தில், அதன் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உயர் அதிகாரிகள் உங்கள் அன்பிற்கு பாத்திரமாவர். கேட்ட சலுகைகள் எளிதில் கிடைக்கும். கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக மாறும். எதிரிகள் விலகுவர். நிலையான வருமானத்திற்கு வழி அமைத்துக்கொள்வீர்கள். இழப்புகளை ஈடுகட்ட புது வாய்ப்புகளும் ஒப்பந்தங்களும் வந்து சேரும். சங்கிலித் தொடராக வந்த கடன் சுமை இனி பாதிக்கு மேலாகக் குறையும். பெற்றோர்களின் உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. அவர்களின் மணிவிழா, பிறந்தநாள் விழா, திருமண நாள் போன்றவற்றை சீரோடும், சிறப்போடும் கொண்டாடி சுபவிரயங்களைக் காண்பது நல்லது. இல்லையேல் வீண் விரயங்களும் விமர்சனங்களால் பாதிப்புகளும் ஏற்படும். வீடு மாற்றங்கள் இக்காலத்தில் ஒருசிலருக்கு வரலாம். வீண் விரோதங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள்.

**குருவின் வக்கிர காலம்**

16.6.2021 முதல் 13.9.2021 வரை கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் கொஞ்சம் கவனத்தோடு செயற்பட வேண்டும். சகாய ஸ்தானாதிபதி தன ஸ்தானத்தில் வக்கிரம் பெறுவதால் கட்டுக்கடங்காத விரயங்கள் ஏற்படலாம். கடமையை சரிவரச் செய்ய இயலாது. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். மனக்கலக்கத்திற்கு மத்தியில் உங்கள் வாழ்க்கை அமையலாம். 'பணப்புழக்கம் அதிகரிக்க என்ன செய்யலாம்?' என்று யோசிப்பீர்கள். அதேநேரம் தொழிலிலும் கவனம் செலுத்த இயலாது. உத்தியோகத்திலும் கவனம் செலுத்த இயலாது.

14.9.2021 முதல் 13.10.2021 வரை மகர இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் குரு. எனவே அவர் வக்கிரம் பெறுவது நன்மை தான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப இக்காலத்தில் ஒருசில நல்ல பலன்களும் கிடைக்கும். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்கள் மூலம் ஆதாயம் தரும் தகவல்கள் வரலாம். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும். உடன்பிறந்தவர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற சுபகாரியங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

**சனியின் வக்கிர காலம்**

12.05.2021 முதல் 26.09.2021 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் மனக்குழப்பங்கள் அதிகரிக்கும். பணப்புழக்கம் குறையும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்ய இயலாது. நீண்டதூரப் பயணங்களால் விரயம் உண்டு.

சேமிப்புகள் கரையலாம். குடும்ப உறுப்பினர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அவர்கள் நன்றி காட்ட மாட்டார்கள். கடுமையாக முயற்சித்த காரியங்கள் கூட முடிவடையாமல் போகலாம். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. பிள்ளைகளாலும் பிறராலும் தொல்லை அதிகரிக்கும். உத்தியோக மாற்றங்கள் உடனுக்குடன் வந்து கொண்டேயிருக்கும்.

**கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்**

14.04.2021 முதல் 3.06.2021 வரை மற்றும் 04.06.2021 முதல் 21.07.2021 வ்ரை செவ்வாய்-சனி பார்வை காலமாகும். இக்காலத்தில் எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்ய வேண்டும். இடர்பாடுகள் அதிகரிக்கும். வழக்குகள் வந்து அலைமோதும். இடமாற்றங்கள் இனிமை தராது. உடல் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடுவீர்கள்.

நீங்கள் அவசரப்பட்டு பேசும் சொற்கள் உங்களுக்கு அவப்பெயரை உண்டாக்கும். புதியவர்களை நம்பி செயற்பட வேண்டாம். பூமி யோகம் ஏற்பட்டாலும் பத்திரப்பதிவில் தடைகள் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் வெறுப்பிற்கு ஆளாக நேரிடும். சகோதர வர்க்கத்தினர்களின் சச்சரவுகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உண்டு.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபடுவது நல்லது. ஏகாதசி விரதமிருந்து திருமால்-திருமகள் வழிபாட்டை மேற்கொண்டால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டில் குடும்பச்சுமை கூடும். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க ஒருவர் மனதை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படுவது நல்லது.

அக்கம், பக்கத்தில் உள்ளவர்களின் பகையை வளர்த்துக் கொள்ளாதீர்கள். தாய் மற்றும் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக பிரயாசை எடுப்பீர்கள். விரயங்கள் அதிகரிக்கும்.

வீடு மாற்றங்களும் இட மாற்றங்களும் விருப்பம் போல் வந்து சேரும். பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் தொல்லை உண்டு. வழிபாட்டின் மூலமே வளர்ச்சி காணும் ஆண்டாக இந்த ஆண்டு அமையும்.

(தொடரும்)

## பிரதேச சபையை...

தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாம் முறையாக தோற்கடிக்கப்பட்டமைக்கமைய உள்ளூராட்சி சபைகளின் திருத்தச் சட்டப் பிரிவின் பிரகாரம் நேற்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சி.மணிவண்ணன் தலைமையில் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது வாக்கெடுப்புக்கு விட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தங்கராசா சார்பாக 10 வாக்குகளும் எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ரத்நாயக்கா சார்பாக 12 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன்படி புதிய தவிசாளராக ரத்நாயக்கா ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

அதனைத் தொடர்ந்து உப்புவெளி பிரதேச சபை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வசமானது.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் 3 உள்ளூராட்சி சபைகள் உள்ள நிலையில் அதில் உப்புவெளி சபை தோற்கடிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## இலங்கைக்கு...

போராட்டம் நடத்தவுள்ளதாக இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், 1976ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தின்படி கச்சதீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குறித்த சங்கத்தின் தலைவர் யேசுராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டம் எதிர் வரும் 23ஆம் திகதி, மீன்பிடி விசைப் படகுகளில் கறுப்புக் கொடி ஏற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் காரைநகர் கடற்படை முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 26 தமிழக மீனவர்களை யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

எனினும், இந்திய மீனவர்களின் நான்கு விசைப் படகுகளையும் அரசுடமை செய்வதாக ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்தே இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்குக் கடும் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (ம-3)

## கொரோனாவால்...

ழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கொழும்பு - 10 பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவர், கொழும்பு -15 பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவர், நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய ஆண் ஒருவர், கிரிபத்கொட பகுதியைச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவர் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 255 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## நால்வருக்கு...

தாகவும் அவர்களில் மன்னாரைச் சேர்ந்த 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ம-3,18)

## கொரோனா சமூக...

பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இன்று வரையில் நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கிராமத்திற்கு கிராமம் அல்லது பிரதேசத்திற்கு பிரதேசம் தனிமைப்படுத்தவில்லை என்றால் நோயை கட்டுப்படுத்தமுடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## வடக்கு - கிழக்கு...

வாறு உருவாக்கப்படும் சுயாட்சிப் பிரதேசம் 'வடக்கு - கிழக்கு மாகாண சுயாட்சி அல்லது 'மாநில சுயாட்சி என பெயரிடப்பட வேண்டும் என புதிய அரசியல் அமைப்புக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கான ஆலோசனைகள் அரசாங்கத்தினால் அனைத்து தரப்புகளிடமிருந்தும் கோரப்பட்டிருந்த நிலையில், குறித்த கட்சியின் அரசியல் குழுவால் கடந்த மாதம் அனுப்பி வைக்கப்பட்ட ஆலோசனை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலோசனை அறிக்கையில், "இந்த நாட்டின் நான்கு தேசிய இனங்களாக சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், மலையகத் தமிழர் ஆகியோரும் தேசிய சிறுபான்மையினராக பறங்கியர், மலாயர், வேடுவர், ஆபிரிக்கர் (கபீர்), பரதர், குறவர், கொழும்பு செட்டி, மலையாளிகள், தெலுங்கர் ஆகியோரும் சமயங்களாக பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களும் மொழிகளாக சிங்களம், தமிழ் ஆகியனவும் எவ்வித பாரபட்சமும் பாராட்டப்படாதவையாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் தேசியக் கொடியானது இந்த அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

அரசானது பிராந்திய சுயாட்சி அமைப்புகளை உடையதாக உள்ளாட்சி நிறுவனங்களுக்கிடையே அதிகாரம் பகிரப்பட்ட இறையாண்மையும் தன்னாதிக்கமும் உடைய ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

இலங்கையானது இன, மத, மொழி, கலாசார பல்வகைமை கொண்ட நாடு என்ற வகையில் வர்க்க, மத, சாதி, மொழி, பாலினம் மற்றும் அனைத்து வகை பாகுபாடுகளையும் நீக்குவதன் மூலமும் பங்குபற்றும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் மூலமும் பொருளாதார சமத்துவத்துவமும் சமூக நீதியும் நிலை நாட்டப்பட வேண்டும் என்றுள்ளது. (ம-3)

## வடக்கில்...

காட்டல் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலும் உள்ள திருமண மண்டபங்களில் 150 பேருடன் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதி அளிப்பதாகவும் அத்துடன் பொதுச்சந்தைகளையும் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி திறப்பதற்கு அனுமதி அளிப்பதாகவும் குறித்த விடயம் தொடர்பான அறிவுறுத்தல்கள் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் மாகாண பிரதம செயலாளர், அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-3,18,60)

## தனி...

சுற்றறிக்கைக்கு அமைவாக மேல் மாகாணம் உள்ளிட்ட கொரோனா வைரஸ் தொற்று அபாய வலயங்களிலிருந்துவருகை தருவோரை சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கை வடக்கு மாகாணத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த தகவலை வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணம் மற்றும் அம்பாறையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து வடக்கு மாகாணத்துக்கு வருகை தருவோரை 14 நாட்களுக்கு சுயதனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கை சுகாதாரத் துறையினரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், அதனை இடைநிறுத்துமாறு சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு நேற்று சுற்றறிக்கை மூலம் பணிக்கப்பட்டதாக கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அவசர தேவை ஏற்பட்டால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் விண்ணப்பித்து, அவரது அனுமதியுடனேயே அபாய வலயங்களிலிருந்து அபாயம் குறைந்த வலயங்களுக்கு வருபவர்களை சுயதனிமைப்படுத்த முடியும் என கேதீஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தனிமைப்படுத்தப்...

வைத்தியர் த.சத்தியமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கொரோனா நிலைமை தொடர்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் நிலைமை தொடர்பில் கருத்து தெரிவித்த வைத்தியர் த.சத்தியமூர்த்தி,

தற்போதைய நிலையில் டெங்கு நோய்த் தொற்று நிலைமை யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடங்களோடு ஒப்பிடும்போது குறைந்த அளவிலே காணப்படுகின்றது.

எனினும் தற்போது மழை பெய்ததன் காரணமாக நீர் தேங்கியிருக்கும் இடங்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக செயற்படுமிடத்து டெங்கு நோய் தாக்கத்திலிருந்து யாழ்.மாவட்டத்தினை பாதுகாக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ம-3,18,33)

## நாட்டில் மேலும்...

இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 51 ஆயிரத்து 219ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

மெகா பவர்
திகதி 15/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0735
K 22 15 21 49 74

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/01/15
சீட்டிழுப்பு இலக்கம் 1566
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 02 09 47 55

மஹஜன சம்பத
திகதி 2021/01/15
சீட்டிழுப்பு இலக்கம் 4368
J 3 2 6 8 4 7

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2663
W 20 25 45 75

தன நிதானய
திகதி - 2021.01.15
சீட்டிழுப்பு இலக்கம் - 405
Y 23 56 66 69

ஜய
சீட்டிழுப்பு வாரம் 677
வர்ணம் பச்சை
திகதி 15.01 2021 வெள்ளி
J 22 29 34 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,180,945
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 1164
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 15.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 98,883,050
வெற்றி இலக்கங்கள் 05 16 18 55 Z

சனிதா
கிழமை: வெள்ளி
சீட்டிழுப்பு இல: 3494
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 15.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,571,256
வெற்றி இலக்கங்கள் 08 16 19 49 E

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,946,197/=
திகதி: 15.01.2021
வெற்றி வாரம்: 3045
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 17 46 57
விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,348,020

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1338
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 15/01/2021
தினம் வெள்ளி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 03 29 30 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,398,047/=

## வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள

# பொருளாதார மத்திய நிலையம் இரு வாரங்களுக்குள் திறக்கப்படும்

### அமைச்சர் சசீந்திர ராஜபக்ச உறுதி

(வவுனியா)

வவுனியாவில் நீண்ட காலமாக திறக்கப்படாமல் காணப்படும் பொருளாதார மத்திய நிலையம் இரு வாரங்களில் திறக்கப்படும் என அமைச்சர் சசீந்திர ராஜபக்ச உறுதியளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினுடாக அமைச்சர் சசீந்திர ராஜபக்சவுடன் நேற்று வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தினை செயற்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிய போதிலும் திறக்கப்படாமல் காணப்படுவதனால் குறித்த கட்டடம் வீணாகுவது மற்றும் பொருளாதார மத்திய நிலையத்தின் தேவை குறித்து தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இரு வாரங்களில் வவுனியா பொருளாதர மத்திய நிலையத்தினை திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என என்னிடம் உறுதி அளித்தார் என பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

(ம-03,299)

## தரம் 6 இல் மாணவர்களை

# அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் பிரபல பாடசாலைகளில் தரம் 6இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி தமிழ்மொழி ஆண்கள் பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி - 178, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி- 166, திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி - 159, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி -160, தமிழ் மொழிமூல பெண்கள் பாடசாலைகள், திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி - 160, யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை - 173, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி - 170, தமிழ்மொழிமூல கலவன் ப்பாடசாலைகள், நெல்லியடி மத்திய கல்லூரி - 163, கொக்குவில் இந்துக் கல்லூரி - 167, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி -165 புள்ளிகள் என வெளியிடப்பட்டுள்ளன. (ம-03)

# கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை சீனாவிடம் பெற்றுக்கொள்ள

### சீன ஜனாதிபதிக்கு கோட்டாபய கடிதம்

(கொழும்பு)

கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை சீனாவிடம் இருந்து பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்குக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கடிதத்தை சீனாவுக்கான இலங்கையின் தூதுவர்பாலித கோஹன, சீன வெளிவிவகார அமைச்சின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்குக் கையளித்துள்ளார்.

இந்த ஆண்டு நடுப்பகுதிக்குள் இலங்கைக்கான தடுப்பூசிகளை இறக்குமதி செய்து, 70 வீதமான பொதுமக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனா மூன்றாம் அலை அல்லது தற்போது காணப்படும் இரண்டாம் அலையின் பரவல் நிலைமைகள்மேலும்விரிவடைய இடமளிக்காது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் மேலும்கூறியுள்ளார். (ம-03)

# அரசுக்கு எதிராக பரந்த கூட்டணி

### ஐ.தே.க துணைத் தலைவர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக பரந்த கூட்டணிஒன்றை அமைப்பதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக தலைவர் ருவன் விஜேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அரசாங்கத்தை எதிர்கொள்ள ஒரு பரந்த எதிர்க்கட்சி அரசியல் சக்தியின் அவசியத்தை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் செல்வாக்கு குறைந்து வருகிறது, இதுவே எதிர்க்கட்சியின் பரந்த அரசியல் சக்தியை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)


**உடனடி வேலை வாய்ப்பு**

A/L படித்த மற்றும் Computer அறிவுடைய ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

Typist & Field office

தொடர்புகளுக்கு (5288)

LANKA CARGO WORLD WIDE EXPRESS
315, Kasthuriyar Road, Jaffna.
076 283 2397, 076 485 4092

**விற்பனைக்கு**

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மானிப்பாயில் வீதிக்கு அண்மையாக வீட்டுடன் கூடிய 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (5286)
077 328 8279

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் நால்வர் கொண்ட அரச வேலை பார்க்கும் குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. (5293)
077 556 3030

**PERSONAL CLASS**

இரசாயனவியல் A/L 2021 - 2022
Repeat Batch, Past Papers
கற்பிக்கப்படும்.
சி. அங்கதன் B.Sc (Chem. Spl.) (5284)
075 436 4510

**ஆட்டோ விற்பனைக்கு உண்டு**

201- /206- வகையைச் சேர்ந்த முழுவதும் திருத்தி வடிவமைக்கப்பட்ட இரண்டு ஆட்டோக்கள் விற்பனைக்கு உண்டு. (5285)
யாழ்ப்பாணம்
077 898 9691

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சியில் 1 ஏக்கர் தென்னங் காணி விற்பனைக்குண்டு. (5292)
077 330 1798

**மணமகள் தேவை**

1979.02.07 இல் பிறந்த 5'. 6" உயரமுடைய சைவ சமய உயர்குலம் மிருகசீரிடம். 2 ஆம் பாதம், கிரகபாவம் 6 உடைய மணமகனுக்கு அழகிய பொருத்தமான மணமகள் தேவை. (5292)
077 330 1798

**வேலை வாய்ப்பு**

- சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு.
- எல்லையற்ற வருமானம்.
- ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள்.
- மேற்படிப்பை தொடர்வதற்கான நிதியினை திரட்டும் வசதி.
- முழு நேரமாகவும் / பகுதி நேரமாகவும் வேலை செய்யக்கூடிய வசதி.
- இல்லத்தரசிகளும் பணிபுரியும் வாய்ப்பு.
- அரச / தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களும் பணிபுரியும் வாய்ப்பு.
- ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பதவி வெற்றிடங்கள்

* நிதி ஆலோசகர் (Wealth Planner)
  - O/L சித்தியடைந்திருத்தல் (கணிதம்) / வயதெல்லை 19 - 65
* நிதி திட்டமிடல் முகாமையாளர் (Wealth Planner Manager)
  - A/L சித்தியடைந்திருத்தல் / வயதெல்லை 19 - 65
  - நிதி சம்பந்தமான முன் அனுபவம்.

தொடர்புகளிற்கு (5266)
62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 733 9334, 074 108 1659, 021 771 0251

**தவறிவிட்டது**

தங்கச்சங்கிலி ( உருத்திராட்சத்துடன் கூடியது ) ஒன்று நல்லூர் முன் வீதிப் பகுதியில் 15.01.2021 அன்று தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
( தகுந்த சன்மானம் வழங்கப்படும். ) (5287)
077 917 2696

**PHYSICS பௌதிகவியல்**

2021, 2022 உயர்தர பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்களிற்கு அலகுரீதியான பௌதிகவியல் மற்றும் கடந்தகால வினாக்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (5282)
076 157 0107

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1102)
0768226240 DHL

**தேவை**

யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதியில் சைவ உணவகம் ஒன்று நடத்துவதற்கு கடை, கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு (5278)
076 535 9985


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.